67.) ஈரோடு மாநகராட்சி மண்டலம்-II பொது சுகாதாரப்பிரிவில் 41 இலகுரக வாகனங்கள் 17 கனரக வாகனங்கள் இயக்கப்பட்டு திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிகளை மேற்கொள்ளும் வாகனங்கள் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் ஒவ்வொரு வருடமும் தகுதிச் சான்றிதழ், பிரதிபலிப்பு சான்றிதழ், மாசு கட்டுப்பாட்டுச் சான்றிதழ் மற்றும் சுற்றுச்சூழல் வரி பெறப்பட்டு வருகிறது. இச்சான்றிதழ் பெறுவதற்கு இலகுரக வாகனங்களுக்கு தோராயமாக ரூ.4,000/- கனரக வாகனங்களுக்கு ரூ.6,000/- கட்டணம் செலுத்தப்பட்டு வருகிறது. இந்த கட்டணங்களை அங்கீகரிக்கப்பட்ட பணிமனைகள் செலுத்துவதற்கு அனுமதி இல்லாததால், சொந்த செலவில் செலுத்திய பிறகு அலுவலகத்தில் இருந்து செலவு தொகையை மீளப் பெறுவதற்கு கால தாமதம் ஆகிறது. ஆகவே, இப்பணிகளை மேற்கொள்வதற்கு நிரந்தர முன்பணம் (Permanent Advance) ரூ.25,000/- ஐ முன்பணமாக பெற்று பணியினை மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.இ1/1073/2026 (ம-2)

278.) அனுமதிக்கப்பட்டது.

68.) ஈரோடு மாநகராட்சி மண்டலம்-3, வார்டு எண். 50, ஈரோடு 'இ' கிராமம், ரீ.ச.எண்.743/1B1C, 1B1Eல், 0.69 ¼ ஏக்கர் (அ) 2799.00 ச.மீ பரப்பளவு கொண்ட இடத்தில் உத்தேசித்துள்ள19 குடியிருப்புகள் கொண்ட மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) மாவட்ட ஊரமைப்பு அலுவலகம், ஈரோடு மாவட்டம் அவர்களின் இணையதள செயல் முறை ந.க.எண். LO1HSHAJ/2026/TCP நாள்:10.03.2026-ல் மனைப்பிரிவிற்கு மனைப்பிரிவு அனுமதி எண். SWP / DTCP / ERODE /LAYOUT APPROVAL NO. 112/2026 மற்றும் SWP/DTCP/ERODE/LPA/PLANNING NO. 10/2026 என எண்ணிடப்பட்டு தொழில் நுட்ப ஒப்புதல் மனுதாரர் திரு. சச்சிதானந்தம், ஈரோடு,

என்பவர்களுக்கு வழங்கப்பட்டு மேல் நடவடிக்கைக்காக மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தில் இருந்து ஈரோடு மாநகராட்சிக்கு உத்தேச மனைபிரிவு இறுதி ஓப்புதலுக்காக வரப்பெற்றுள்ளது.

மேற்படி மனைப்பிரிவின் வரைபடத்தில் கண்டுள்ள 40.88 ச.மீ பரப்பு பொது உபயோக இடம், தானசாசன பதிவு எண். 4031/2021, நாள். 28.07.2021-ன் மூலம் ஈரோடு மாநகராட்சி ஆணையாளருக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டும் மற்றும் 47.02 ச.மீ பரப்பு மின் பகிர்மான கழகத்திற்கான திறவிடம்) தானசாசன பதிவு எண். 4032/2021, நாள். 28.07.2021-ன் மூலம் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் மேற்பார்வை பொறியாளர் அவர்களுக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி இடத்தில் உத்தேசித்துள்ள 19 மனைகள் கொண்ட குடியிருப்பு மனைப்பிரிவிற்கு விண்ணப்பதாரரால் அரசாணை எண். 181 நாள். 09.12.2020 -ன் படியும், நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 12843/2022 டிபி -2 நாள். 20.10.2022 - ன் படியும் சாலை வசதி, குடிநீர் குழாய் மற்றும் மழைநீர் வடிகால் வசதி, தெருவிளக்கு மற்றும் பாதாள சாக்கடை ஆகிய பணிகள் முறையாக அமைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசாணையின் படி மனைப்பிரிவு அபிவிருத்தி பணிகளின் உரிய கட்டணங்கள் மாநகராட்சி கருவூலத்தில் செலுத்திய பின்பு இறுதி ஓப்புதல் ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அவர்களால் வழங்கப்படும்.

எனவே அரசாணை எண். 181 நாள். 09.12.2020 -ன் படியும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12843/2022 டிபி-2 நாள். 20.10.2022-ன் படியும், மேற்படி சாலைகள் மற்றும் பொது உபயோக இடம் ஆகியவற்றை தானமாக பெறப்பட்டதற்கு நகர் ஊரமைப்பு துறையின் நிபந்தனைகளுடன் 19 மனைகள் கொண்ட உத்தேச மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :-

மாமன்றம் அனுமதி வழங்கலாம்

கோப்பு எண்: 1365/2026/இ1(ம-3)

279.) அனுமதிக்கப்பட்டது.

69.) ஈரோடு மாநகராட்சி மண்டலம்-3 , வார்டு எண். 49, திண்டல் கிராமம், ரீ.ச.எண்.220/7A1B1, 7A1B3-ல், 0.79 ஏக்கர் (அ) 3198.00 ச.மீ பரப்பளவு கொண்ட இடத்தில் உத்தேசித்துள்ள 17 குடியிருப்புகள் கொண்ட மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) மாவட்ட ஊரமைப்பு அலுவலகம், ஈரோடு மாவட்டம் அவர்களின் இணையதள செயல் முறை ந.க.எண். 8E4LMICN/2026/TCP நாள்:11.02.2026-ல் மனைப்பிரிவிற்கு மனைப்பிரிவு அனுமதி எண். SWP / DTCP/ERODE /LAYOUT APPROVAL NO. 56/2026 என எண்ணிடப்பட்டு தொழில் நுட்ப ஒப்புதல் மனுதாரர் திருமதி. ஆர்.ஷோபிகா மற்றும் எம்.சந்துரு, நாமக்கல், என்பவர்களுக்கு வழங்கப்பட்டு மேல் நடவடிக்கைக்காக மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தில் இருந்து ஈரோடு மாநகராட்சிக்கு உத்தேச மனைபிரிவு இறுதி ஒப்புதலுக்காக வரப்பெற்றுள்ளது.

மேற்படி மனைப்பிரிவின் வரைபடத்தில் கண்டுள்ள 295.20 ச.மீ பரப்பு சாலைகள், 49.17 ச.மீ பரப்பு பொது உபயோக இடம், தானசாசன பதிவு எண். 518/2026 நாள். 31.01.2026 -ன் மூலம் ஈரோடு மாநகராட்சி ஆணையாளருக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டும் மற்றும் 44.41 ச.மீ பரப்பு மின் பகிர்மான கழகத்திற்கான திறவிடம்) தானசாசன பதிவு எண். 519/2026 நாள். 31.01.2026 -ன் மூலம் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் மேற்பார்வை பொறியாளர் அவர்களுக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி இடத்தில் உத்தேசித்துள்ள 17 மனைகள் கொண்ட குடியிருப்பு மனைப்பிரிவிற்கு விண்ணப்பதாரரால் அரசாணை எண். 181 நாள். 09.12.2020 -ன் படியும், நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 12843/2022 டிபி -2 நாள். 20.10.2022 - ன் படியும் சாலை வசதி, குடிநீர் குழாய் மற்றும் மழைநீர் வடிகால் வசதி, தெருவிளக்கு மற்றும் பாதாள சாக்கடை ஆகிய பணிகள் முறையாக அமைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசாணையின் படி மனைப்பிரிவு அபிவிருத்தி பணிகளின் உரிய கட்டணங்கள் மாநகராட்சி கருவூலத்தில் செலுத்திய பின்பு இறுதி ஒப்புதல் ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அவர்களால் வழங்கப்படும்.

எனவே அரசாணை எண். 181 நாள். 09.12.2020 -ன் படியும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12843/2022 டிபி-2 நாள். 20.10.2022-ன் படியும், மேற்படி சாலைகள் மற்றும் பொது உபயோக இடம் ஆகியவற்றை தானமாக பெறப்பட்டதற்கு நகர் ஊரமைப்பு துறையின் நிபந்தனைகளுடன் 17 மனைகள் கொண்ட உத்தேச மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :-

மாமன்றம் அனுமதி வழங்கலாம்

கோப்பு எண்: 1364/2025/இ1(ம-3)

280.) அனுமதிக்கப்பட்டது.

70.) அரசாணை (MS) No : 390 பொது துறை (முதல்வரின் முகவரி) நாள் :19.06.2025 அரசாணையின் படி அனைத்து மாவட்டங்களின் நகர்புறங்களில் பொதுமக்களுக்கு சேவைகள் வழங்குவதை இலக்காக கொண்ட Service Delivery & Door steps என்ற முதல்வரின் முகவரி துறை உங்களுடன் ஸ்டாலின் முகாம்கள் நடத்தி முடிக்க அறிவுறுத்தப்பட்டதின் படி ஈரோடு மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ந.க.எண்.18412/2025/1-2, நாள்.03.07.2025 செயல்முறை உத்திரவிற்கிணங்க ஈரோடு மாநகராட்சி மண்டலம்-2க்குட்பட்ட வார்டு எண். 20-ற்கு பெருந்துறை ரோடு ஈஸ்வரமூர்த்தி மஹாலில் வைத்து 06.08.2025 தேதி அன்று உங்களுடன் ஸ்டாலின் முகாம் நடத்த முடிவு செய்யப்பட்டது.

எனவே மேற்கண்ட இடங்களில் முகாமில் கலந்து கொள்ளும் 13 துறைகளை சார்ந்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் முகாம்களில் மனுக்களை பெற ஏதுவாக அடிப்படை வசதிகளான சேர்கள், டேபிள்கள் அமைத்து தருதல், குடிநீர் வசதி செய்தல், உணவு வழங்குதல் மற்றும் முகாம் நடைபெறும் இடங்களில் முகப்பில் பொதுமக்கள் அமரும் வகையில் சேர்கள், டேபிள்கள், பேன்கள், சாமியானா மற்றும் மின்சார வசதிக்கான அமைப்புகள் அமைக்கவும் மேலும், முகாம்களில் மக்களிடம் பெறப்படும் மனுக்களுக்கு தேவையான ஆவணங்கள் பற்றிய விபரம் மற்றும் முகாம் நடக்கும் இடங்களை பொது மக்கள் அறியும் வண்ண

பாதாகைகளை முகாம் நடைபெறும் இடம் மற்றும் மண்டலம்-2-க்குட்பட்ட மேற்கண்ட வார்டுகளில் மக்கள் அறியும் வகையில் அமைக்கவும் மற்றும் அடிப்படை வசதிகள் மேற்கொள்ளவும் அவசியமாகிறது. இதற்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.3.75 இலட்சம் ஆகும். எனவே, ஈரோடு மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ந.க.எண். 18412/2025/1-2, நாள்.03.07.2025 கடிதம் பெறப்பட்டவுடன், இத்திட்டத்தின் 03.08.2025 அன்று பணியினை துவங்க வேண்டிய சூழல் உள்ளதால், ஒப்பந்தப்புள்ளி கோரி மேற்கண்ட அடிப்படை வசதிகளை செய்திட கால அவகாசம் இல்லாத காரணத்தினாலும், மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் (திருத்த) சட்டம் 2022 (தமிழ்நாடு சட்டம் 35/2022) இதன் படி திருத்தப்பட்ட தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998-ன் 57(7)-வது பிரிவின் கீழ் இப்பணியினை மேற்கொள்ள ஆணையாளர் அவர்களின் அனுமதி பெறப்பட்டு விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அவற்றில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய திரு.N.Arumugam, Erode ஒப்பந்ததாரர் அவர்களின் விலைப்புள்ளி ரூ.3,74,485/- ஏற்று பணி முடிக்கப்பட்ட விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

கோப்பு எண்.இ1/7612.2025 (ம-2)

281.) பதிவு செய்யப்பட்டது

71.) அரசாணை (MS) No : 390 பொது துறை (முதல்வரின் முகவரி) நாள் :19.06.2025 அரசாணையின் படி அனைத்து மாவட்டங்களின் நகர்புறங்களில் பொதுமக்களுக்கு சேவைகள் வழங்குவதை இலக்காக கொண்ட Service Delivery & Door steps என்ற முதல்வரின் முகவரி துறை உங்களுடன் ஸ்டாலின் முகாம்கள் நடத்தி முடிக்க அறிவுறுத்தப்பட்டதின் படி ஈரோடு மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ந.க.எண்.18412/2025/1-2, நாள்.03.07.2025 செயல்முறை உத்திரவிற்கிணங்க ஈரோடு மாநகராட்சி மண்டலம்-2க்குட்பட்ட வார்டு எண். 5 மற்றும் 8-ற்கு ஸ்ரீ மஹாலில் வைத்து 16.07.2025 தேதி அன்று உங்களுடன் ஸ்டாலின் முகாம் நடத்த முடிவு செய்யப்பட்டது.

எனவே மேற்கண்ட இடங்களில் முகாமில் கலந்து கொள்ளும் 13 துறைகளை சார்ந்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் முகாம்களில் மனுக்களை பெற ஏதுவாக அடிப்படை வசதிகளான சேர்கள், டேபிள்கள் அமைத்து தருதல், குடிநீர் வசதி செய்தல், உணவு வழங்குதல் மற்றும் முகாம் நடைபெறும் இடங்களில் முகப்பில் பொதுமக்கள் அமரும் வகையில் சேர்கள், டேபிள்கள், பேன்கள், சாமியானா மற்றும் மின்சார வசதிக்கான அமைப்புகள் அமைக்கவும் மேலும், முகாம்களில் மக்களிடம் பெறப்படும் மனுக்களுக்கு தேவையான ஆவணங்கள் பற்றிய விபரம் மற்றும் முகாம் நடக்கும் இடங்களை பொது மக்கள் அறியும் வண்ண பாதாகைகளை முகாம் நடைபெறும் இடம் மற்றும் மண்டலம்-2-க்குட்பட்ட மேற்கண்ட வார்டுகளில் மக்கள் அறியும் வகையில் அமைக்கவும் மற்றும் அடிப்படை வசதிகள் மேற்கொள்ளவும் அவசியமாகிறது. இதற்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.8.00 இலட்சம் ஆகும். எனவே, ஈரோடு மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ந.க.எண். 18412/2025/1-2, நாள்.03.07.2025 கடிதம் பெறப்பட்டவுடன், இத்திட்டத்தின் 13.07.2025 அன்று பணியினை துவங்க வேண்டிய சூழல் உள்ளதால், ஒப்பந்தப்புள்ளி கோரி மேற்கண்ட அடிப்படை வசதிகளை செய்திட கால அவகாசம் இல்லாத காரணத்தினாலும், மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் (திருத்த) சட்டம் 2022 (தமிழ்நாடு சட்டம் 35/2022) இதன் படி திருத்தப்பட்ட தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998-ன் 57(7)-வது பிரிவின் கீழ் இப்பணியினை மேற்கொள்ள ஆணையாளர் அவர்களின் அனுமதி பெறப்பட்டு விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அவற்றில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய திரு.N.Arumugam, Erode ஒப்பந்ததாரர் அவர்களின் விலைப்புள்ளி ரூ.7,98,589/- ஏற்று பணி முடிக்கப்பட்ட விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

கோப்பு எண்.இ1/0424./.2025 (ம-2)

282.) பதிவு செய்யப்பட்டது

72) அரசாணை (MS) No : 390 பொது துறை (முதல்வரின் முகவரி) நாள் :19.06.2025 அரசாணையின் படி அனைத்து மாவட்டங்களின் நகர்புறங்களில்

பொதுமக்களுக்கு சேவைகள் வழங்குவதை இலக்காக கொண்ட Service Delivery & Door steps என்ற முதல்வரின் முகவரி துறை உங்களுடன் ஸ்டாலின் முகாம்கள் நடத்தி முடிக்க அறிவுறுத்தப்பட்டதின் படி ஈரோடு மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ந.க.எண்.18412/2025/1-2, நாள்.03.07.2025 செயல்முறை உத்திரவிற்கிணங்க ஈரோடு மாநகராட்சி மண்டலம்-2க்குட்பட்ட வார்டு எண். 9 மற்றும் 12-ற்கு மாணிக்கம்பாளையம் ஈபீஸ் மஹாலில் வைத்து 30.07.2025 தேதி அன்று உங்களுடன் ஸ்டாலின் முகாம் நடத்த முடிவு செய்யப்பட்டது.

எனவே மேற்கண்ட இடங்களில் முகாமில் கலந்து கொள்ளும் 13 துறைகளை சார்ந்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் முகாம்களில் மனுக்களை பெற ஏதுவாக அடிப்படை வசதிகளான சேர்கள், டேபிள்கள் அமைத்து தருதல், குடிநீர் வசதி செய்தல், உணவு வழங்குதல் மற்றும் முகாம் நடைபெறும் இடங்களில் முகப்பில் பொதுமக்கள் அமரும் வகையில் சேர்கள், டேபிள்கள், பேன்கள், சாமியானா மற்றும் மின்சார வசதிக்கான அமைப்புகள் அமைக்கவும் மேலும், முகாம்களில் மக்களிடம் பெறப்படும் மனுக்களுக்கு தேவையான ஆவணங்கள் பற்றிய விபரம் மற்றும் முகாம் நடக்கும் இடங்களை பொது மக்கள் அறியும் வண்ண பாதாகைகளை முகாம் நடைபெறும் இடம் மற்றும் மண்டலம்-2-க்குட்பட்ட மேற்கண்ட வார்டுகளில் மக்கள் அறியும் வகையில் அமைக்கவும் மற்றும் அடிப்படை வசதிகள் மேற்கொள்ளவும் அவசியமாகிறது. இதற்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.4.54 இலட்சம் ஆகும். எனவே, ஈரோடு மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ந.க.எண். 18412/2025/1-2, நாள்.03.07.2025 கடிதம் பெறப்பட்டவுடன், இத்திட்டத்தின் 27.07.2025 அன்று பணியினை துவங்க வேண்டிய சூழல் உள்ளதால், ஒப்பந்தப்புள்ளி கோரி மேற்கண்ட அடிப்படை வசதிகளை செய்திட கால அவகாசம் இல்லாத காரணத்தினாலும், மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் (திருத்த) சட்டம் 2022 (தமிழ்நாடு சட்டம் 35/2022) இதன் படி திருத்தப்பட்ட தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998-ன் 57(7)-வது பிரிவின் கீழ் இப்பணியினை மேற்கொள்ள ஆணையாளர் அவர்களின் அனுமதி பெறப்பட்டு விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அவற்றில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய திரு.N.Arumugam, Erode ஒப்பந்ததாரர் அவர்களின் விலைப்புள்ளி ரூ.4,51,208/- ஏற்று பணி முடிக்கப்பட்ட விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

கோப்பு எண்.இ1/3012/.2025 (ம-2)

283.) பதிவு செய்யப்பட்டது

73.) அரசாணை (MS) No : 390 பொது துறை (முதல்வரின் முகவரி) நாள் :19.06.2025 அரசாணையின் படி அனைத்து மாவட்டங்களின் நகர்புறங்களில் பொதுமக்களுக்கு சேவைகள் வழங்குவதை இலக்காக கொண்ட Service Delivery & Door steps என்ற முதல்வரின் முகவரி துறை உங்களுடன் ஸ்டாலின் முகாம்கள் நடத்தி முடிக்க அறிவுறுத்தப்பட்டதின் படி ஈரோடு மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ந.க.எண்.18412/2025/1-2, நாள்.03.07.2025 செயல்முறை உத்திரவிற்கிணங்க ஈரோடு மாநகராட்சி மண்டலம்-2க்குட்பட்ட வார்டு எண். 11 மற்றும் 18-ற்கு மாணிக்கம்பாளையம் ஈபீஸ் மஹாலில் வைத்து 230.07.2025 தேதி அன்று உங்களுடன் ஸ்டாலின் முகாம் நடத்த முடிவு செய்யப்பட்டது.

எனவே மேற்கண்ட இடங்களில் முகாமில் கலந்து கொள்ளும் 13 துறைகளை சார்ந்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் முகாம்களில் மனுக்களை பெற ஏதுவாக அடிப்படை வசதிகளான சேர்கள், டேபிள்கள் அமைத்து தருதல், குடிநீர் வசதி செய்தல், உணவு வழங்குதல் மற்றும் முகாம் நடைபெறும் இடங்களில் முகப்பில் பொதுமக்கள் அமரும் வகையில் சேர்கள், டேபிள்கள், பேன்கள், சாமியானா மற்றும் மின்சார வசதிக்கான அமைப்புகள் அமைக்கவும் மேலும், முகாம்களில் மக்களிடம் பெறப்படும் மனுக்களுக்கு தேவையான ஆவணங்கள் பற்றிய விபரம் மற்றும் முகாம் நடக்கும் இடங்களை பொது மக்கள் அறியும் வண்ண பாதாகைகளை முகாம் நடைபெறும் இடம் மற்றும் மண்டலம்-2-க்குட்பட்ட மேற்கண்ட வார்டுகளில் மக்கள் அறியும் வகையில் அமைக்கவும் மற்றும் அடிப்படை வசதிகள் மேற்கொள்ளவும் அவசியமாகிறது. இதற்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.4.54 இலட்சம் ஆகும். எனவே, ஈரோடு மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ந.க.எண். 18412/2025/1-2, நாள்.03.07.2025 கடிதம் பெறப்பட்டவுடன், இத்திட்டத்தின் 27.07.2025 அன்று பணியினை துவங்க வேண்டிய சூழல் உள்ளதால், ஒப்பந்தப்புள்ளி கோரி மேற்கண்ட அடிப்படை வசதிகளை செய்திட கால

அவகாசம் இல்லாத காரணத்தினாலும், மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் (திருத்த) சட்டம் 2022 (தமிழ்நாடு சட்டம் 35/2022) இதன் படி திருத்தப்பட்ட தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998-ன் 57(7)-வது பிரிவின் கீழ் இப்பணியினை மேற்கொள்ள ஆணையாளர் அவர்களின் அனுமதி பெறப்பட்டு விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அவற்றில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய திரு.N.Arumugam, Erode ஒப்பந்ததாரர் அவர்களின் விலைப்புள்ளி ரூ.4,51,208/- ஏற்று பணி முடிக்கப்பட்ட விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

கோப்பு எண்.இ1/6572/.2025 (ம-2)

284.) பதிவு செய்யப்பட்டது

74.) ஈரோடு மாநகராட்சி பகுதிகளில் பொது நிதி 2025-26ன் கீழ் 5 பணிகளை மேற்கொள்ள ஆணையாளர் அவர்களின் நிர்வாக அனுமதி பெறப்பட்டதை தொடர்ந்து, கீழ்கண்ட பணிகளுக்கு E- tendering முறையில் 16.09.2025 ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டுள்ள நிலையில் நிர்வாக காரணங்களால் 19.09.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி திறக்கப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை அனுமதிக்கப்பட்ட விலை விகிதத்துடன் ஒப்புநோக்கும் பொழுது பெறப்பட்ட விபரம் பின்வருமாறு,

வ. எண்	பணியின் பெயர்	மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சம்)	ஆணையாளர் அவர்களின் நிர்வாக அனுமதி நாள்	வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி ஒப்பந்ததாரர்களின் விபரம்	அனுமதிக் -கப்பட்ட விலை விகிதத்துடன் ஒப்புநோக்கும் விபரம்	குறைவான விலைவிகிதம் அளித்துள்ள ஒப்பந்ததாரர் விபரம்
1.	ஈரோடு மாநகராட்சி மண்டலம்-1க்குட்பட்ட வார்டு எண். 13-ல் மல்லிகை நகர் பின்புறம், கொத்துக்காரர் தோட்டம், சு.க.வலசு தெற்கு, சு.க.வலசு வடக்கு, கந்தையன் தோட்டம், வார்டு எண்.23-ல் ஏபிடி ரோடு, திருமலை வீதி,சிதம்பரனார் வீதி, 16 மெயின் ரோடு, வார்டு எண்.17ல் நேரு வீதி, தேவராயர் வீதி, 16 மெயின் ரோடு ஆகிய பகுதிகளில் உள்ள பாதாள சாக்கடைக் குழாய்கள் உடைப்பு மற்றும் இணைப்புகளில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்தல்	13.50	23.06.2025	M/s. S.N. Dhathrikash Infra Projects	(-) 0.04 % குறைவு.	M/s. S.N. Dhathrikash Infra Projects
				Thiru. V.Dhamodharan	(+) 1.77 % அதிகம்.	
2.	ஈரோடு மாநகராட்சி மண்டலம்-1க்குட்பட்ட வார்டு எண். 14-ல் நேதாஜி வீதி, பட்டேல் வீதி, வார்டு எண்.16-ல் வைராபாளையம் 1 வழ 4 வீதிகள், வார்டு எண்.17ல் காவேரி ரோடு, வார்டு எண்.23ல் ஏபிடி ரோடு, சேரன் வீதி, வார்டு எண்.25ல் கமலா நகர் கடைசி வீதி, வார்டு எண்.26ல் கலைஞர் நகர் 1வது வீதி, கருங்கல்பாளையம் அம்மா உணவகம், கிருஷ்ணம்பாளையம் ஆகிய பகுதிகளில் உள்ள பாதாள சாக்கடைக் குழாய்கள் உடைப்பு மற்றும் இணைப்புகளில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி	11.00	23.06.2025	M/s. S.N. Dhathrikash Infra Projects	(-) 0.06 % குறைவு.	M/s. S.N. Dhathrikash Infra Projects
				Thiru. V.Dhamodharan	(+) 0.47 % அதிகம்.	

	செய்தல					
3.	ஈரோடு மாநகராட்சி மண்டலம்-2 க்குட்பட்ட வார்டு எண்.36 அப்துல் கனி வணிக வளாகத்தில் கூடுதல் வசதிகள் மேற்கொள்ளும் பணி	10.50	24.03.2025	M/s. Balaguru Infra	(-) 0.11 % குறைவு.	M/s.Balaguru Infra
				Thiru. K Nandhakumar contractor	(+) 1.00 % அதிகம்.	
4.	ஈரோடு மாநகராட்சி மண்டலம்-1 க்குட்பட்ட வார்டு எண்.13,14,23,24,25,26 ஆகிய பகுதிகளில் பழுடைந்த பாதாள சாக்கடையை மறுசீர் அமைத்தல் பணி	6.00	28.05.2025	M/s. Balaguru Infra	(-) 0.25 % குறைவு.	M/s. Balaguru Infra
				Thiru. K Nandhakumar contractor	(+) 0.92 % அதிகம்.	
5.	Providing New EB Service Connection Box and Pipe Line Interlinking arrangements at Senathipalayam in ward no.56	1.80	11.08.2025	1) Thiru. V.Dhanmodharan	(-) 0.11 % குறைவு.	Thiru. V.Dhanmodharan
				2)Thiru.S.Sakthivel	(+) 3.84 % அதிகம்.	

மேற்கண்ட பணிக்கு 1 சதவீதம் டேவணித்தொகையை ஒப்பந்ததாரர்கள் இணையதள வாயிலாக செலுத்தியுள்ளனர், எனவே வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும் மற்றும் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட குறைவான விலைவிகிதம் அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தை ஏற்க மாண்புமிகு மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை ஆணை வழங்கி நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மாமன்ற அனுமதி வேணடப்படுகிறது.

அலுவலககுறிப்பு :-

அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்.இ1/1519/2025 (மையம்)

285.) பதிவு செய்யப்பட்டது

75.) மாமன்றம் – ஈரோடு மாநகராட்சியில் மாற்றுத் திறனாளிகளை மன்ற உறுப்பினராக நியமனம் செய்யப்பட்ட உறுப்பினருக்கு மதிப்பூதியம் வழங்குதல் – தொடர்பாக.

பொருள்

பார்வை 1. அரசாணை (நிலை) எண்.119 மற்றும் 120 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்)துறை நாள் 26.06.2025

2. நகராட்சி நிர்வாக இயக்குனர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.13033/2022எம்ஏ,2 நாள் 30.06.2025 மற்றும் 09.01.2026

3. தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் (திருத்தம்) 2022.

பார்வையில் 1-இல் கண்டுள்ள அரசாணைகளின்படி நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு பிரதிநிதித்துவம் அளிக்கும் வகையில் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையிலான மற்றும் மாவட்ட அளவிலான குழுவின் பரிந்துரைகளின்படி மாமன்றம் நியமனம் செய்யப்பட்டுள்ள மாற்றுத்திறனாளி திரு. மா. செந்தில்குமார் கடந்த 27.11.2025 ஆம் தேதி உறுதிமொழி ஏற்று பதவியேற்றுக் கொண்டார்.

பார்வை 3-ல் காணும் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள்(திருத்தம்) 2022ன் சட்டப்பிரிவு 48-இல், நியமன மாமன்ற உறுப்பினருக்கு மதிப்பூதியம் வழங்குவது குறித்து பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

."48.) **தலைமையாளர்,துணைத்தலைமையாளர், மனற உறுப்பினர் மற்றும் நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர் ஆகியோருக்கு மதிப்பூதியங்கள், ஊதியக் கட்டணங்கள் அல்லது படித்தொகை வழங்கப்படுதல்- (1)அரசினால் தீர்மானிக்கப்படகூடிய மதிப்பூதியங்கள், ஊதியக்கட்டணங்கள் அல்லது படித்தொகைகள் நகராட்சிய நிதியங்களிலிருந்து தலைமையாளர் ,துணை தலைமையாளர், மன்ற உறுப்பினர்கள் மற்றும் 37ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின்**

(i-a) கூறின்கீழ் நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர் ஆகியோருக்கு வழங்கப்படுதல் வேண்டும்."

எனவே மேற்காணும் சட்டப்பிரிவின்படி மாதந்தோறும் ரூ.10,000/- மதிப்பூதியம் வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இம்மாநகராட்சி நியமன உறுப்பினருக்கு, நவம்பர் 2025 முதல் பிப்ரவரி 2026 வரை 10,000 x 4 = ரூ.40,000/- (ரூபாய் நாற்பதாயிரம் மட்டும்) வழங்க மாமன்றத்தின் முன்அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று மதிப்பூதியம் வழங்கியமைக்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்.சி3/6379./2024 (மையம்)

286.) பதிவு செய்யப்பட்டது

76.) ஈரோடு மாநகராட்சியில் KfW மற்றும் சீர்மிகு நகரம் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட பாதாள சாக்கடை திட்ட சிப்பம் I மற்றும் II பணியில் 259.60 கிலோ மீட்டர் நீளமுள்ள சேகரிப்பு குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், வீடுகளுக்கு இணைப்பு வழங்கப்பட்டு உபயோகத்தில் உள்ளது. சிப்பம் I மற்றும் II சாலையோர கழிவுநீருந்து நிலையம் (LS) 5 எண்ணிக்கை மூலமாகவும் உப கழிவுநீரேற்று நிலையம் (PS) 6 எண்ணிக்கை மூலமாகவும் சேகரம் செய்து பிரதான கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு செல்லப்படுகிறது.

இந்த கழிவுநீர் சேகரிக்கப்படும் குழாய்கள் இயந்திரக் குழிகள் சாலையோர கழிவுநீருந்து நிலையங்கள் உப கழிவுநீரேற்று நிலையங்கள் மற்றும் பிரதான கழிவுநீரேற்று நிலையம் உள்ளிட்ட பாதாள சாக்கடை திட்ட கட்டமைப்புகளை தினமும் இயக்கி பராமரிக்கும் பணிக்கு தற்போதுள்ள ஒப்பந்த காலம் 15.06.2026-உடன் முடிவடையவுள்ளது. இந்நிலையில் அரசாணை எண் 113, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீரு் வழங்கல் துறை நாள் 17.08.2022-ன் படி KPI (Key Performance Indicator)

முக்கிய செயல்திறன் குறியீடுகள் நிர்ணயம் செய்து இயக்கி பராமரிப்பது குறித்து அரசால் உரிய வழிமுறைகள் தயாரித்து செயல்படுத்த நடவடிக்கையில் உள்ளது. அதுவரை பொது மக்களின் பொது சுகாதாரத்தைக் கருத்தில் கொண்டு மேற்படி இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணியினை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியுள்ளது.

எனவே, 16.06.2026 முதல் மேலும் 75 நாட்களுக்கு (31.08.2026 வரை) மேற்படி இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அறிவுரைகளின் படி வெளி முகமை மூலம் ஒப்பந்த முறையில் பணியமர்த்திக் கொள்ளவும் அதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ. 46.00 இலட்சத்திற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பொது சுகாதாரத்தை பேணிகாக்கும் பொருட்டு மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியினை எதிர் நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று அலுவலக தொடர் நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

கோப்பு எண்.இ2/1352/2026 (மையம்)

287.) அலுவலக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

77.) ஈரோடு மாநகராட்சியில் KfW மற்றும் சீர்மிகு நகரம் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட பாதாள சாக்கடை திட்ட சிப்பம் III மற்றும் IV பணியில் 265.95 கிலோ மீட்டர் நீளமுள்ள சேகரிப்பு குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், வீடுகளுக்கு இணைப்பு வழங்கப்பட்டு உபயோகத்தில் உள்ளது. சிப்பம் III மற்றும் IV சாலையோர கழிவுநீருந்து நிலையம் (LS) 6 எண்ணிக்கை மூலமாகவும் உப கழிவுநீரேற்று நிலையம் (PS) 5 எண்ணிக்கை மூலமாகவும் சேகரம் செய்து பிரதான கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு செல்லப்படுகிறது.

இந்த கழிவுநீர் சேகரிக்கப்படும் குழாய்கள் இயந்திரக் குழிகள் சாலையோர கழிவுநீருந்து நிலையங்கள் உப கழிவுநீரேற்று நிலையங்கள் மற்றும் பிரதான கழிவுநீரேற்று நிலையம் உள்ளிட்ட பாதாள சாக்கடை திட்ட கட்டமைப்புகளை தினமும் இயக்கி பராமரிக்கும் பணிக்கு தற்போதுள்ள ஒப்பந்த காலம் 15.06.2026-உடன் முடிவடையவுள்ளது. இந்நிலையில் அரசாணை எண் 113, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீரு் வழங்கல் துறை நாள் 17.08.2022-ன் படி KPI (Key Performance Indicator) முக்கிய செயல்திறன் குறியீடுகள் நிர்ணயம் செய்து இயக்கி பராமரிப்பது குறித்து அரசால் உரிய வழிமுறைகள் தயாரித்து செயல்படுத்த நடவடிக்கையில் உள்ளது. அதுவரை பொது மக்களின் பொது சுகாதாரத்தைக் கருத்தில் கொண்டு மேற்படி இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணியினை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியுள்ளது.

எனவே, 16.06.2026 முதல் மேலும் 75 நாட்களுக்கு (31.08.2026 வரை) மேற்படி இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அறிவுரைகளின் படி வெளி முகமை மூலம் ஒப்பந்த முறையில் பணியமர்த்திக் கொள்ளவும் அதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ. 49.80 இலட்சத்திற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பொது சுகாதாரத்தை பேணிகாக்கும் பொருட்டு மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியினை எதிர் நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று அலுவலக தொடர் நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

கோப்பு எண்.இ2/1353/2026 (மையம்)

288.) அலுவலக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

78.) ஈரோடு மாநகராட்சியில் ஈரோடு வட்டம் பெரியசேமூர் ஆ கிராமம் புல எண் 201/1 முதலிய காலைகளில் 5.46.50 ஹெக்டேர் அல்லது 54.650 ச.மீட்டர் (ஏக்கர் 13.504 சென்ட்) ரயத்து புன்செய் நிலத்தில் ஈரோடு சக்தி சாலையில் புதிய பேருந்துநிலைய அமைப்பதற்கு நிலம் கையகப்படுத்துதலில் நியாயமான சரியீடு

மற்றும் ஒளிமறைவின்மை மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு உரிமைச்சட்டம் 2013-ன் கீழ் நிலமெடுப்பு செய்ய அரசாணை(நிலை) எண் 113 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(மாந6)துறை நாள் 24.06.2025 ல் நிர்வாகஅனுமதி வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது எனவும் ஈரோடு மாநகராட்சியின் (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை) மூலம் புதிய பேருந்துநிலையம் அமைக்கும் பணிக்கு நிலமெடுப்பு செய்ய நிலம் கையகப்படுத்துதலில் நியாயமான சரியீடு மற்றும் ஒளிவு மறைவின்மை மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு உரிமைச்சட்டம் 2013-(RECTLARRACT2013)பிரிவு11(1) கீழான முதல்நிலை அறிவிக்கை ஈரோடு மாவட்டஆட்சித்தலைவர் அவர்களின் ந.க.எண் 10500/2022/ஆ1 நாள் 02.02.2026ன்படி வெளியிட உத்திரவிடப்பட்டு ஈரோடு மாவட்டத்தில் வெளிவருகின்ற தினத்தந்தி தமிழ் தினசரி நாளிதழ் மற்றும் TheNewIndianExpressஆங்கில தினசரி நாளிதழ் ஆகியவற்றில் 05.02.2026 அன்று பிரசுரம் செய்யப்பட்டது எனவும் இந்நேர்வில் மேற்படி விளம்பரம் செய்ததற்கு M/S Accored Advertising Agencies Chennai நிறுவன ஊடக மேலாளரின் கடிதத்தில் மேற்படி சட்டப்பிரிவு 11(1) கீழான முதல்நிலை அறிவிக்கையை பிரசுரத்திற்கான விளம்பரக்கட்டணத்தொகை ரூ-4,60,017-ஐ செலுத்த கேட்டுள்ளார் எனவும் மேற்படி விளம்பர கட்டணத்தை மாநகராட்சி மூலம் M/S Accored Advertising Agencies Chennai க்கு செலுத்தி அதன் விபரத்தை தெரிவிக்க மாவட்டவருவாய்அலுவலர் ஈரோடு மாவட்டம் அவர்களின் கடிதம் ந.க.எண் 10500/2022/ஆ1 நாள் 19.02.2026ன் வாயிலாக தெரிவிக்கப்பட்டது.

ஆகவே மேற்கண்டவாறு சத்திரோடு பேருந்துநிலையத்திற்கான நிலமெடுப்பு செய்ய நிலம் கையகப்படுத்தலில் நியாயமான சரியீடு மற்றும் ஒளிவு மறைவின்மை,மறுவாழ்வு மற்றும் குடியமர்வு உரிமைச்சட்டம் 2013 பிரிவு 11(1)கீழான முதல்நிலை அறிவிக்கையை நாளிதழ்களில் பிரசரித்ததற்குரிய விளம்பரக்கட்டணம் ரூ.4,60,017/- ஐ அதை விளம்பரம் செய்த M/S Accored Advertising Agencies Chennai

நிறுவனத்திற்கு மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்.இ1/6363/2021(மையம்)

289.) அனுமதிக்கப்பட்டது

79.) ஈரோடு மாநகராட்சி மண்டலம்-2 வார்டு எண்.05க்குட்பட்ட பொது மக்கள் பயன்பெறும் வகையில் மாகாளியம்மன் கோவில் வீதி, கொங்கம்பாளையத்தில் பகுதி சபா கூட்டம் 15.10.2025 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் கலந்து கொள்ளும் பொது மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளான சாமியானா பந்தல், டேபிள், சேர், குடிநீர் ஒளி, ஒலி அமைப்புகள் மற்றும் பேனர்கள் அமைத்தல் போன்ற வசதிகளை மேற்கொள்ளப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. எனவே மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி பணியினை தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் (திருத்த சட்டம் 2022 தமிழ்நாடு சட்டம் 35/2022) இதன்படி திருத்தப்பட்ட தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998 இன் 57 (7)வது பிரிவின்கீழ் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய திரு. என். ஆறுமுகம் ஒப்பந்தாரர் ஈரோடு அவர்களின் விலைப்புள்ளியை ஏற்றி மேற்படி பணியை செய்து முடிக்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ.1,22,272/- ஐ திரு. என் ஆறுமுகம் ஒப்பந்தாரர், ஈரோடு அவர்களுக்கு வழங்கியதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

கோப்பு எண்.இ1./9038/2025 (ம-2)

290.) பதிவு செய்யப்பட்டது.

80.) ஈரோடு மாநகராட்சி மண்டலம்-IV பொது சுகாதாரப்பிரிவில் 37 இலகுரக வாகனங்கள் 11 கனரக வாகனங்கள் இயக்கப்பட்டு திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிகளை மேற்கொள்ளும் வாகனங்கள் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் ஒவ்வொரு வருடமும் தகுதிச் சான்றிதழ், பிரதிபலிப்பு சான்றிதழ், மாசு கட்டுப்பாட்டுச் சான்றிதழ் மற்றும் சுற்றுச்சூழல் வரி பெறப்பட்டு வருகிறது. இச்சான்றிதழ் பெறுவதற்கு இலகுரக வாகனங்களுக்கு தோராயமாக ரூ.4,000/- கனரக வாகனங்களுக்கு ரூ.6,000/- கட்டணம் செலுத்தப்பட்டு வருகிறது. இந்த கட்டணங்களை அங்கீகரிக்கப்பட்ட பணிமனைகள் செலுத்துவதற்கு அனுமதி இல்லாததால், சொந்த செலவில் செலுத்திய பிறகு அலுவலகத்தில் இருந்து செலவு தொகையை மீளப் பெறுவதற்கு கால தாமதம் ஆகிறது. ஆகவே, இப்பணிகளை மேற்கொள்வதற்கு நிரந்தர முன்பணம் (Permanent Advance) ரூ.25,000/-ஐ முன்பணமாக பெற்று பணியினை மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.இ2/637.2026 (ம-4)

291.) அனுமதிக்கப்பட்டது

81.) ஈரோடு மாநகராட்சி மண்டலம் 2க்குட்பட்ட வார்டு எண் 29-ல் சம்பத்நகர் பகுதியில் உழவர் சந்தை செல்லும் சாலையில் உள்ள மழைநீர் வடிகாலின் சுவரானது, அப்பகுதியில் பெய்த கனமழையினால் வடிகாலிற்குள்ளேயே இடிந்து விழுந்து வடிகாலின் செயல்பாடுபாதிக்கப்பட்டது. மேலும், வடிகால் சுவர் இடிந்து விழுந்ததில் பாதாள சாக்கடை பிரதான குழாய் இணைப்புகளும் உடைந்தன. இதனால் அப்பகுதியில் சுகாதாரசீர்கேடு ஏற்பட்டது. மேலும், மழைநீர் வடிகாலில் தடுப்புசுவர் இல்லாததால், பொதுமக்களின் பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தலான நிலைஏற்பட்டது. எனவே, இப்பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998-ன்57(7)-ன்படி மற்றும் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் (திருத்த) சட்டம் 2022-ன் 35

பிரிவின்கீழ் மேற்கொள்ள உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய திருவாளர்.YES PEE ASSOCIATES, ஒப்பந்ததாரர் ஈரோடு அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்படி பணியை செய்து முடிக்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ.3,49,627/-ஐ ,திருவாளர்.YES PEE ASSOCIATES ,ஒப்பந்ததாரர், ஈரோடு அவர்களுக்கு வழங்கியதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

கோப்பு எண். இ1/ 00488 /2026 (ம-2)

292.) பதிவு செய்யப்பட்டது.

82.) ஈரோடு மாநகராட்சி மண்டலம் - 2 க்குட்பட்ட வார்டு எண்: 12, 18, 20, 22 ஆகிய பகுதிகளில் உள்ள சாலைகளில் அமைக்கப்பட்ட பாதாளசாக்கடைத் திட்டத்தின் 32 இயந்திர ஆய்வுக்கு (UGD MACHINE HOLE) களின் மூடிகள் பழுதடைந்தும் சாலையின் மட்டத்தை விட பள்ளமாகவும் இருந்ததால் போக்கு வரத்திற்கும் பொதுமக்களுக்கும் மிகுந்த இடையூறு ஏற்படுத்தியதுடன் விபத்து ஏற்படும் சூழ்நிலையும் உருவாகிறது. எனவே பொதுமக்களின் பாதுகாப்பு கருதி மேற்படி இயந்திர ஆய்வுக்குழிகளை உடனடியாக சீரமைத்து போக்குவரத்தைசீர் செய்ய வேண்டியது அவசியமாக இருந்தது. எனவே மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி பணியினை தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் (திருத்த சட்டம் 2022 தமிழ்நாடு சட்டம் 35/2022) இதன்படி திருத்தப்பட்ட தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998-ன் 57 (7) வது பிரிவின் கீழ் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதில் குறைந்த விலை விகிதம் வழங்கிய திருவாளர் S.N. DHATHRIKASH INFRAPROJECTS, ஒப்பந்ததாரர், ஈரோடு அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்படி பணியை செய்துமுடிக்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ.4,44,091.00/-ஐ, திருவாளர் S.N. DHATHRIKASH INFRAPROJECTS,

ஒப்பந்ததாரர், ஈரோடு அவர்களுக்கு வழங்கியதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

கோப்பு எண். இ2/003733/2025 (ம-2)

293.) அனுமதிக்கப்பட்டது

83.) ஈரோடு மாநகராட்சி மண்டலம் -1 வார்டு எண்.23- க்குட்பட்ட வீரப்பன் சத்திரம் பழைய மண்டல அலுவலகத்தின் பின்புறம் வாக்குச்சாவடி எண். 58-ஆனது அமைந்துள்ளது. அந்த வாக்குச்சாவடிக்கு வெளியே திறந்த வெளியாக இருந்ததது, தேர்தலின் போது பொதுமக்கள் வரிசையில் நின்று வாக்குகளை செலுத்த சிரமமாக இருந்ததது. மேலும், வாக்கு சாவடி நிலை அலுவலர்களும் அமர்ந்து பணியாற்ற சிரமமாக இருந்ததாலும் ஒவ்வொரு தேர்தல் சமயத்திலும் தேர்தல் ஆணையத்தின் அறிவுரையின்படி தற்காலிக சாமியான அமைக்கப்பட்டு வருவதாலும், இந்நிலையில் மேற்படி, வாக்குசாவடியின் வெளிப்புற இடத்திற்கு நிரந்தரமான செட் அமைக்க ஆணையாளர் அவர்களின் ஆய்வின் போது அறிவுறுத்தப்பட்டு மேற்படி, இந்த வெளிப்புற இடத்திற்கு நிரந்தரமான செட் அமைக்க வேண்டியது அவசியமாகியது. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி இப்பணியினை தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் திருத்த சட்டம் 2022 (தமிழ்நாடு சட்டம் 35 2022) இதன்படி, திருத்தப்பட்ட தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998-ன் 57(7) பிரிவின் கீழ் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அவற்றில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய திருவாளர். Thulir Infra Developers Pvt Ltd, ஒப்பந்ததாரர், ஈரோடு. அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்கண்ட பணிகள் செய்து முடிக்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ.6,83,102/-ஐ திருவாளர். Thulir Infra Developers Pvt Ltd, ஒப்பந்ததாரர், ஈரோடு அவர்களுக்கு வழங்கியதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

கோப்பு எண். இ1/0390 /2026(ம-1)

294.) பதிவு செய்யப்பட்டது.

84.) ஈரோடு மாநகராட்சி மண்டலம் -1 -க்குட்பட்ட வார்டு எண் 14 அதியமான் நகர் பகுதியில் ஈரோடு to பவானி செல்லும் சாலையில் நெடுஞ்சாலை விரிவாக்க பணிகள் நடைப்பெறுகிறது. மேற்கண்ட பகுதியில் உள்ள பிச்சைக்காரன் பள்ளத்தில் புதிதாக பாலம் கட்டும் கட்டுமான பணிகள் நடைபெற்ற போது அவ்வழியே மல்லிநகர் UGD PS-ல் இருந்து காரைவாய்கால் PS -க்கு செல்லும் பம்பிங் மெயின் குழாய்(DI 600MM) பாலத்தின் பில்லரின்(Span) ஊடே வந்ததால் உடைப்பு ஏற்பட்டு குழாயை மாற்றி அமைக்க வேண்டியது அவசியாமகியது. மேலும், மேற்கண்ட மல்லி நகர் பம்பிங் ஸ்டேசன் மூலம் பாதாள சாக்கடை நீரை பம்பிங் செய்வதற்கு உடைந்த குழாய்களை புதிதாக பொருத்துவதுடன் பாலம் கட்டுமான பணிகளுக்கு இடையூறு இல்லாமல் பம்பிங் மெயின் குழாய் பாதையை மாற்றி அமைத்திட வேண்டியது அவசியமாகியது. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி இப்பணியினை தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் திருத்த சட்டம் 2022 (தமிழ்நாடு சட்டம் 35 2022) இதன்படி, திருத்தப்பட்ட தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998-ன் 57(7) பிரிவின் கீழ் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அவற்றில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய திருவாளர். Thayi Infra Projects Solutions, ஒப்பந்ததாரர், ஈரோடு. அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்கண்ட பணிகள் செய்து முடிக்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ.14,98,360..00/-ஐ திருவாளர். Thayi Infra Projects Solutions, ஒப்பந்ததாரர், ஈரோடு அவர்களுக்கு வழங்கியதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

கோப்பு எண். இ2/ 280 / 2026(ம-1)

295.) பதிவு செய்யப்பட்டது

85.) ஈரோடு மாநகராட்சி மண்டலம் 1-க்குட்பட்ட வார்டு எண் 14-ல் பவானி முதன்மை சாலை விரிவாக்க பணிகள் நடைபெற்று வந்ததது. அதில் சாலையின் மையப்பகுதியில் UGD பம்பிங் மெயின் பைப் (600mm) பதியப்பட்டு, அதன் ஏர் வால்வு மற்றும் ஏர் சேம்பர் அமைத்து பயன்பாட்டில் இருந்ததது. மேற்படி ஏர் வால்வு மற்றும் சேம்பர் சாலை விரிவாக்க பணிக்கு இடையூறாக இருந்ததால் அதனை சாலையின் ஓரத்தில் இடம்மாற்றி குழாய் அமைத்து பொருத்த வேண்டியது அவசியமாகியது. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி இப்பணியினை தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் திருத்த சட்டம் 2022 (தமிழ்நாடு சட்டம் 35 2022) இதன்படி, திருத்தப்பட்ட தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998-ன் 57(7) பிரிவின் கீழ் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அவற்றில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய திருவாளர். Thayi Infra Projects Solutions, ஒப்பந்ததாரர். ஈரோடு. அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்கண்ட பணிகள் செய்து முடிக்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ.2,06,692/-ஐ திருவாளர் Thayi Infra Projects Solutions. ஒப்பந்ததாரர், ஈரோடு அவர்களுக்கு வழங்கியதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

கோப்பு எண். இ2/ 382 / 2026 (ம-1)

296.) பதிவு செய்யப்பட்டது

86.) ஈரோடு மாநகராட்சி மண்டலம் -1 வார்டு எண். 14,16,17 மற்றும் 23-க்குட்பட்ட பிச்சைக்காரன் பள்ளம் ஓடை முதல் வ.உ.சி பூங்கா வரை உள்ள பவானி பிரதான

சாலை அகலப்படுத்தும் பணி நெடுஞ்சாலைத் துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வந்ததது. மேற்படி, பணி நடைபெறும் பொழுது சாலையோரம் உள்ள மரங்கள் அகற்றப்பட்டது.. அதனால் பாதாள சாக்கடையின் வீட்டு இணைப்பு மற்றும் பிரதான கழிவு நீர் இணைப்பு இடையில் பரவி உள்ள வேர்களை அகற்றும் போது பாதாள சாக்கடை குழாய்கள் சேதமடைந்து கழிவு நீர்க்கசிவு ஏற்பட்டு சுகாதார சீர்கேடு ஏற்படும் நிலை ஏற்பட்டது. இதனால் இப்பகுதிகளில் வசிக்கும் சுமார் 500 குடியிருப்பதாரர்களின் கழிவு நீர் சீரான முறையில் வெளியேற்றம் செய்ய முடியவில்லை. எனவே,பொது சுகாதாரத்தை பேணிகாக்கும் பொருட்டு சேதமடைந்திருந்த மேற்குறிப்பிட்டுள்ள பாதாள சாக்கடை வீட்டிணைப்பு குழாய்களை உடனடியாக சீரமைப்பு செய்ய வேண்டியது அவசியமாகியது. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி இப்பணியினை தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் திருத்த சட்டம் 2022 (தமிழ்நாடு சட்டம் 35 2022) இதன்படி, திருத்தப்பட்ட தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998-ன் 57(7) பிரிவின் கீழ் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அவற்றில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய திருவாளர். Thayi Infra Projects Solutions, ஒப்பந்ததாரர், ஈரோடு. அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்கண்ட பணிகள் செய்து முடிக்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ.20,98,123-ஐ திருவாளர். Thayi Infra Projects Solutions, ஒப்பந்ததாரர், ஈரோடு அவர்களுக்கு வழங்கியதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

கோப்பு எண். இ2/ 380 / 2026(ம-1)

297.) பதிவு செய்யப்பட்டது

87.) ஈரோடு மாநகராட்சி மண்டலம்- 2 அலுவலகத்தில் இயங்கி வரும் சுகாதாரப் பிரிவில் (Health Section) தற்பொழுது போதிய இடவசதி இல்லாத காரணத்தினால் அலுவலக பணிகளுக்கு சிரமம் ஏற்பட்டு வருகிறது. எனவே,

சுகாதாரப் பிரிவின் தற்போதைய அத்தியாவசியத் தேவையைக் கருத்தில் கொண்டு கூடுதல் அறைகளின் (Additional Room) கட்டுமானப் பணி மேற்கொள்வதும், அத்துடன் அலுவலகக் கட்டடத்தின் தற்போதைய நிலையை மேம்படுத்த அலுவலகப் பராமரிப்புப் பணிகளை (Office Maintenance Works) மேற்கொள்வதுற்கும் ரூ.16.20 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட பணிகளை ரூ.16.20 இலட்சம் மதிப்பிட்டில் பொது நிதியின் மூலம் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :-

மாமன்றம் அனுமதி வழங்கலாம்

கோப்பு எண் இ1/1077/2026 (ம-2)

298.) அனுமதிக்கப்பட்டது.

88.) ஈரோடு மாநகராட்சிமண்டலம் - 2 க்குட்பட்ட வார்டு எண்: 21, 28, 29ஆகிய பகுதிகளில் உள்ள சாலைகளில் அமைக்கப்பட்ட பாதாள சாக்கடைத் திட்டத்தின் இயந்திர ஆய்வுக்குழி (UGD MACHINE HOLE) களின் மூடிகள் பழுதடைந்தும் சாலையின் மட்டத்தைவிட பள்ளமாகவும் இருந்ததால் போக்குவரத்திற்கும் பொதுமக்களுக்கும் மிகுந்த இடையூறு ஏற்படுத்தியதுடன் விபத்து ஏற்படும் சூழ்நிலையும் உருவாகியது. எனவே பொதுமக்களின் நலன்கருதி மேற்படி இயந்திர ஆய்வுக்குழிகளை உடனடியாக சீரமைத்து போக்குவரத்தை சீர்செய்ய வேண்டியது அவசியமாக இருந்தது. எனவே மேற்படி பணியின்அவசரஅவசியம் கருதி மேற்படி பணியினைதமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் (திருத்தசட்டம் 2022 தமிழ்நாடுசட்டம் 35/2022) இதன்படி திருத்தப்பட்ட தமிழ்நாடுநகர்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998-ன் 57 (7) வதுபிரிவின்கீழ் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதில்குறைந்த விலைவிகிதம் வழங்கிய திருவாளர்.S.N. DHATHRIKASH INFRAPROJECTS, ஒப்பந்ததாரர் ஈரோடு அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்படி பணியை செய்து முடிக்கப்பட்டு அதற்கான

பட்டியல்தொகை ரூ.4,41,652/-ஐ, திருவாளர். SN DHATHRIKASH INFRAPROJECTS, ஒப்பந்ததாரர், ஈரோடு அவர்களுக்கு வழங்கியதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

பார்வையிட்டு பதிவு செய்யலாம்

கோப்பு எண். இ2/3602/2025 (ம-2)

299.) பதிவு செய்யப்பட்டது

89.) ஈரோடு மாநகராட்சி மண்டலம்-1-க்குட்பட்ட ஈரோடு பவானி நெடுஞ்சாலையில் நெடுஞ்சாலைதுறையின் மூலம் சாலை விரிவாக்க பணிகள் நடைபெற்று வந்ததது. அதில், சாலைகளை அகலம் மற்றும் அதன் உயரத்தையும் உயர்த்தியதால் அந்த நெடுஞ்சாலையில் ஏற்கனவே உள்ள பாதாள சாக்கடையின் கழிவு நீர் இயந்திர ஆய்வு குழிகள் சாலையின் உயரத்தை விட குறைவாக இருந்ததது. அதனால் பாதாள சாக்கடை குழாயில் அடைப்புகள் ஏற்பட்டு அதனை பராமரிக்கும் பணிக்கும் சிரமமாக இருந்தது மேலும் போக்குவரத்திற்கும் இடையூறு ஏற்பட்டது. ஆகவே, உதவி செயற்பொறியாளர் அவர்கள் மேற்படி நெடுஞ்சாலையில் வ.உ.சி பூங்கா முதல் 16-ரோடு வரை நேராய்வு செய்து மேற்படி பாதாள சாக்கடை கழிவு நீர் இயந்திர ஆய்வு குழிகளை நெடுஞ்சாலைதுறையின் மூலம் உயர்த்தப்பட்டு சாலையின் மட்டத்திற்கு உடனடியாக உயர்த்தி சரி செய்திட அறிவுறுத்தினார். இச்சாலையானது பவானி, மேட்டூர், தருமபுரி உள்ளிட்ட நகரங்களுக்கு செல்லும் பிரதான சாலையாக இருந்ததாலும் பொது போக்குவரத்தினை கருத்தில் கொண்டும் மேற்படி இயந்திர ஆய்வுக் குழிகளை சாலை மட்டத்திற்கு உயர்த்தும் பணிகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டியது அவசியமாகியது. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி இப்பணியினை தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் திருத்த சட்டம் 2022 (தமிழ்நாடு சட்டம் 35 2022) இதன்படி, திருத்தப்பட்ட தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998-ன் 57(7) பிரிவின் கீழ் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அவற்றில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய

திருவாளர். Thayi Infra Projects Solutions, ஒப்பந்ததாரர், ஈரோடு. அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்கண்ட பணிகள் செய்து முடிக்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ.11,31,960..00/-ஐ திருவாளர். Thayi Infra Projects Solutions, ஒப்பந்ததாரர், ஈரோடு அவர்களுக்கு வழங்கியதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது .

அலுவலக குறிப்பு :-

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

கோப்பு எண். இ2/ 380 / 2026 (ம-1)

300.) பதிவு செய்யப்பட்டது

90.) ஈரோடு மாநகராட்சி பெரிய சேமூர் மண்டலம்- 2 அலுவலகத்தில் தற்போது கண்காணிப்பு கேமராக்கள் இல்லாததால் பாதுகாப்பின் அவசியம் கருதி புதியதாக கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட வேண்டியுள்ளது. எனவே, பாதுகாப்பு தேவையைக் கருத்தில் கொண்டு புதிய கண்காணிப்பு கேமராக்கள் (CCTV Surveillance System) பொருத்தும் பணியினை ரூ.2.75 இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதியின் மூலம் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :-

மாமன்றம் அனுமதி வழங்கலாம்

கோப்பு எண்.இ1/1028./2026 (ம-2)

301.) அனுமதிக்கப்பட்டது.

91.) ஈரோடு மாநகராட்சி மண்டலம் -1க்குட்பட்ட வார்டு எண் . 03 குறிஞ்சி நகர் பகுதி மற்றும் வார்டு எண்.01 நீலிகரடு பகுதியில் பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ள பொது கழிப்பிடங்களுக்கு தண்ணீர் தேவையை பூர்த்தி செய்ய ஆழ்துளை கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்தி மேற்க்கண்ட பொதுகழிப்பிடங்களுக்கு தண்ணீர் வசதி செய்யப்பட்டு பயன்பாட்டில் இருந்தது. மேற்கண்ட மின்

மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை அவ்வப்போது பழுதுகள் சரிசெய்யப்பட்டு வந்த நிலையில் மீண்டும் மின் மோட்டார்கள் பழுது ஏற்பட்டதன் காரணமாக மின் மோட்டாரினை கழற்றி ஆய்வு செய்ததில் மோட்டார் மற்றும் பம்பில் உள்ள முக்கிய பாகங்கள் அதிகபடியாக தேய்மானம் அடைந்து மேலும் சரிசெய்ய இயலாத நிலையில் இருந்தது. மேலும் வார்டு எண்.03 க்குட்பட்ட ராமன் பாலக்காட்டூரில் குடிநீர் தேவைக்காக அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை குழாய் கிணற்றில் பொருத்தப்பட்டுள்ள G.I பைப்கள் துரு பிடித்து ஆங்காங்கே பழுது ஏற்பட்டும், தண்ணீர் பம்பிங் செய்ய முடியாத நிலை இருந்தன. எனவே மேற்படி பொது கழிப்பிடத்திற்கு தண்ணீர் வசதி செய்திட புதிதாக 5 HP நீர் மூழ்கி மின் மோட்டார்கள் இரண்டு (2) எண்ணிக்கையில் வாங்கி பொருத்தியும், மற்றும் பழுதடைந்த G.I பைப் குழாய்களுக்கு பதிலாக புதியதாக பி.வி.சி பைப் மற்றும் கேபிள்கள் மாற்றி அமைத்திட வேண்டியது அவசியமாகியது. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி இப்பணியினை தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் திருத்த சட்டம் 2022 (தமிழ்நாடு சட்டம் 35 2022) இதன்படி, திருத்தப்பட்ட தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998-ன் 57(7) பிரிவின் கீழ் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அவற்றில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய திருவாளர். S.V & Co ஒப்பந்ததாரர், ஈரோடு. அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்கண்ட பணிகள் செய்து முடிக்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ .2,70,409.00. /-ஐ திருவாளர். S.V & Co, ஒப்பந்ததாரர், ஈரோடு அவர்களுக்கு வழங்கியதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

கோப்பு எண். இ2/ 0187 / 2026 (ம-1)

302.) பதிவு செய்யப்பட்டது

92.) ஈரோடு மாநகராட்சி மண்டலம் -1 -க்குட்பட்ட வார்டு எண்.1 சாணார்பாளையம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் குடிநீர் வசதி -கழிப்பிடம் மற்றும் சுகாதார தேவைகளுக்கு ஆழ்துளை கிணறு அமைத்து அதனுள் 5HP நீர்முழ்கி மின்மோட்டர் பொருத்தி தண்ணீர் வசதி செய்யப்பட்டது. தற்சமயம் ஆழ்துளை கிணற்றில் நீர்முழ்கி மின்மோட்டர் Pipe கிளாம்பில் இருந்து கழன்று ஆழ்துளை கிணறு அடி ஆழத்தில் சேற்றில் சிக்கி கொண்டு இருந்ததால் மின்மோட்டரினை மேலே எடுக்க இயலவில்லை. அதனால் அப்பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு தண்ணீர் வசதி வழங்க மேலும், பொது மக்கள் மற்றும் சுகாதார நிலையத்திற்கு வருபவர்களின் தண்ணீர் தேவையினை பூர்த்தி செய்யும் பொருட்டு மேற்படி ஆழ்குழாய் கிணற்றில் புதிய மின்மோட்டார் பொருத்த வேண்டியது அவசியமாகியது. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி இப்பணியினை தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் திருத்த சட்டம் 2022 (தமிழ்நாடு சட்டம் 35 2022) இதன்படி, திருத்தப்பட்ட தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998-ன் 57(7) பிரிவின் கீழ் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அவற்றில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய திருவாளர். S.V & Co ஒப்பந்ததாரர், ஈரோடு. அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்கண்ட பணிகள் செய்து முடிக்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ .1,28,701../-ஐ திருவாளர். S.V & Co, ஒப்பந்ததாரர், ஈரோடு அவர்களுக்கு வழங்கியதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

கோப்பு எண். இ2/0128 / 2026 (ம-1)

303.) பதிவு செய்யப்பட்டது

93.) ஈரோடு மாநகராட்சி மண்டலம் -1 -க்குட்பட்ட வார்டு எண்.14 ராஜா வீதி பகுதியில் பொது மக்களின் குடிநீர் அல்லாத தண்ணீர் தேவையினை பூர்த்தி செய்ய ஆழ்துளை கிணறு அமைத்து நீர்மூழ்கி மின்மோட்டார் பொருத்தி தண்ணீர் வசதி செய்யப்பட்டு பயன்பாட்டில் இருந்தது. மேற்கண்ட நீர்மூழ்கி மின்மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை அவ்வவ்போது சரிசெய்யப்பட்டு இயக்கி வரப்பட்டது. தற்சமயம் நீர்மூழ்கி மின்மோட்டார் பம்பு பழுது ஏற்பட்டதன் காரணமாக கழற்றி ஆய்வு செய்ததில் மோட்டார் மற்றும் பம்பில் உள்ள முக்கிய பாகங்கள் அதிகப்படியான தேய்மானம் அடைந்து மீண்டும் சரிசெய்து இயக்க இயலாத நிலையில் இருந்தததது. மேலும், இதன் ஸ்டார்டலரில் ஏற்பட்ட சர்விஸ் செய்து பழுதுகளை சரிசெய்து பயன்படுத்த இயலாத நிலையில் இருந்தததது. ஆகவே, பொது மக்கள் பயன்பாட்டிற்கு தண்ணீர் வசதி செய்திட புதிதாக 5HP நீர்மூழ்கி மின்மோட்டார் பம்பு மற்றும் ஸ்டார்டர் ஒரு எண்ணிக்கையில் வாங்கி பொருத்தி அமைத்திட வேண்டியது அவசியமாகியது. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி இப்பணியினை தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் திருத்த சட்டம் 2022 (தமிழ்நாடு சட்டம் 35 2022) இதன்படி, திருத்தப்பட்ட தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998-ன் 57(7) பிரிவின் கீழ் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அவற்றில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய திருவாளர். S.V & Co ஒப்பந்ததாரர், ஈரோடு. அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்கண்ட பணிகள் செய்து முடிக்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ1,30,611..00 /-ஐ திருவாளர். S.V & Co, ஒப்பந்ததாரர், ஈரோடு அவர்களுக்கு வழங்கியதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

கோப்பு எண். இ2/380 / 2026(ம-1)

304.) பதிவு செய்யப்பட்டது

94.) ஈரோடு மாநகராட்சி மண்டலம் – I பொது சுகாதாரப்பிரிவில் 36 இலகுரக வாகனங்கள் 10 கனரக வாகனங்கள் இயக்கப்பட்டு திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிகளை மேற்கொள்ளும் வாகனங்கள் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் ஒவ்வொரு வருடமும் தகுதிச் சான்றிதழ் பிரதிபலிப்பு ஸ்டிக்கர், மாசு கட்டுப்பாட்டுச் சான்றிதழ் மற்றும் சுற்றுச்சூழல் வரி பெறப்பட்டு வருகிறது. இச்சான்றிதழ் பெறுவதற்கு இலகுரக வாகனங்களுக்கு தோராயமாக ரூ.4.000/- கனரக வாகனங்களுக்கு ரூ.6,000/- கட்டணம் செலுத்தப்பட்டு வருகிறது. இந்த கட்டணங்களை அங்கீகரிக்கப்பட்ட பணிமனைகள் செலுத்துவதற்கு அனுமதி இல்லாததால், சொந்த செலவில் செலுத்திய பிறகு அலுவலகத்தில் இருந்து செலவு தொகையை மீளப்பெறுவதற்கு கால தாமதம் ஆகிறது. ஆகவே இப்பணிகளை மேற்கொள்வதற்கு நிரந்தர முன்பணம் (Permanent Advance) ரூ.25,000/- ஐ முன்பணமாக பெற்று பணியினை மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

அனுமதிக்கலாம்

கோப்பு எண். இ2/0914 /2026 (ம-1)

305.) அனுமதிக்கப்பட்டது.

95.) ஈரோடு மாநகராட்சி மண்டலம் – III பொது சுகாதாரப்பிரிவில் 44 இலகுரக வாகனங்கள் 12 கனரக வாகனங்கள் இயக்கப்பட்டு திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிகளை மேற்கொள்ளும் வாகனங்கள் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் ஒவ்வொரு வருடமும் தகுதிச் சான்றிதழ் பிரதிபலிப்பு ஸ்டிக்கர், மாசு கட்டுப்பாட்டுச் சான்றிதழ் மற்றும் சுற்றுச்சூழல் வரி பெறப்பட்டு வருகிறது. இச்சான்றிதழ் பெறுவதற்கு இலகுரக வாகனங்களுக்கு தோராயமாக ரூ.4.000/- கனரக வாகனங்களுக்கு ரூ.6,000/- கட்டணம் செலுத்தப்பட்டு வருகிறது. இந்த கட்டணங்களை அங்கீகரிக்கப்பட்ட பணிமனைகள் செலுத்துவதற்கு அனுமதி இல்லாததால், சொந்த செலவில் செலுத்திய பிறகு அலுவலகத்தில் இருந்து செலவு தொகையை மீளப்பெறுவதற்கு கால தாமதம் ஆகிறது. ஆகவே இப்பணிகளை

மேற்கொள்வதற்கு நிரந்தர முன்பணம் (Permanent Advance) ரூ.25,000/- ஐ முன்பணமாக பெற்று பணியினை மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

அனுமதிக்கலாம்

கோப்பு எண். B1/1621 / 2026 (ம-3)

306.) அனுமதிக்கப்பட்டது.

131.) தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் இந்திய தேர்தல் ஆணையத்தால் 23.04.2026 அன்று நடைபெற்றது. இத்தேர்தலுக்கான வாக்குச்சாவடிகளில் குறைந்தபட்ச அடிப்படை வசதிகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் கோடை காலமாக உள்ளதால் வாக்களிக்க வரும் வாக்காளர்களுக்கு உரிய வசதி ஏற்படுத்தி தர வேண்டும் எனவும் மாவட்ட ஆட்சித்தலைவர், தேர்தல் மேற்பார்வையாளர் மற்றும் ஈரோடு கிழக்கு தேர்தல் நடத்தும் அலுவலர் ஆகியோரால் அறிவுறுத்தப்பட்டது. மேலும் தேர்தல் பணியில் ஈடுபடும் வாக்குச்சாவடி அலுவலர்கள் மற்றும் காவலர்கள் இரவு தங்கி பணியாற்ற வேண்டியிருந்ததால் அவர்களுக்கு தேவையான வசதிகளையும் ஏற்படுத்த வேண்டியிருந்தது. அதற்கிணங்க ஈரோடு மாநகராட்சி

மண்டலம் 1-ல் 6 தனியார் பள்ளி வளாகங்களில் 28 வாக்குச்சாவடிகளும், 1 எண்ணிக்கை அரசு பள்ளியில் 2 வாக்குச்சாவடி மற்றும் 8 மாநகராட்சி பள்ளி வளாகங்களில் 42 வாக்குச்சாவடிகளும் என மொத்தம் 72 வாக்குச்சாவடி மையங்களில் தேர்தல் தொடர்பான அடிப்படை வசதிகளான அரசியல் கட்சி சார்புடைய விளம்பரங்களை அழித்தல், மின் சாதனங்கள், மின் விளக்குகள், சாய்வு தளம் (Ramp), தற்காலிகத் தடுப்புகள், எல்லைக்கோடுகள், நிழற்கூடங்கள் உள்ளிட்ட வசதிகள் வாடகை அடிப்படையில் மேற்கொள்ள வேண்டியிருந்தது.

எனவே மேற்படி தேர்தல் பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் (திருத்த) சட்டம் 2022 (தமிழ்நாடு சட்டம் 35.2022) இதன்படி திருத்தப்பட்ட தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998-ன் 57(7)-வது பிரிவின் கீழ் இப்பணியினை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு விலைப்புள்ளிகள் பெறப்பட்டது அதில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய திருவாளர். துளிர் இன்ப்ரா , ஒப்பந்ததாரர், ஈரோடு அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்படி பணியை செய்து முடிக்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ. 23,20,705/-ஐ, M/S Thulir Infra Developers (P) Ltd, ஒப்பந்ததாரர், ஈரோடு அவர்களுக்கு வழங்கியதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:-

மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

கோப்பு.எண். இ1-1068-2026.(ம-1)

342.) பதிவு செய்யப்பட்டது

132.) (098) ஈரோடு கிழக்கு சட்டமன்ற பொது தேர்தல் 23.04.2026 அன்று நடைபெற்றது. தேர்தல் முடிவுற்று அன்று மாலை வாக்கு சாவடிகளுக்கான வாக்கு பதிவு பெட்டிகள் IRTT அரசு கல்லூரியிலுள்ள கணிணி பிரிவு கட்டிடத்தில் பாதுகாப்பு அறை உருவாக்கப்பட்டு அங்கு வாக்கு பதிவு இயந்திரங்கள் வைத்து பாதுகாப்பு செய்யப்பட்டன. மே 4-ம் தேதி அதே கட்டிடத்தில் முதல் மாடியில் கணிணி ஆய்வு கூடத்தில் வாக்கு எண்ணிக்கை மேற்கொள்ள வாக்கு பதிவு எண்ணமிடம் மற்றும்

வரவேற்பு பகுதியில் டேபிள், சேர், சாமியானா, தரைவிரிப்பு, மின் விசிறி மற்றும் கணிணி வைத்து டேட்டாக்களை பதிவேற்றம் செய்ய கணிணிகளுக்கான பிளக் பாயின்ட்கள் மற்றும் குடிநீர் கேன்கள், சுற்றுகளின் முடிவுகளை ஒளிபரப்ப தொலைகாட்சி பெட்டிகள் வைத்தல் போன்ற முன்னேற்பாடு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

மேற்கண்ட பணி தேர்தல் பணியாக உள்ளதால் மேற்படி பணியின் அவசர அவசியத்தைக் கருதி தமிழ்நாடு நகர்புர உள்ளாட்சிகள் (திருத்த) சட்டம் 2002(தமிழ்நாடு சட்டம் 35/2022)-ன் படி திருத்தப்பட்ட தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998-ன் 57(7)-வது பிரிவின் கீழ் இப்பணியை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அவற்றில் குறைந்த விலை விகிதம் வழங்கிய திருவாளர்கள். Balaguru Infra, Erode ஒப்பந்ததாரர் அவர்களின் விலைப்புள்ளி ஏற்று பணியினை முடிக்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ.16,40,265/-ஐ திருவாளர்கள். Balaguru Infra, Erode ஒப்பந்ததாரருக்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:-

மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

கோப்பு.எண். இ1-1067-2026(ம-1)

343.) பதிவு செய்யப்பட்டது

133.) தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் இந்திய தேர்தல் ஆணையத்தால் 23.04.2026 அன்று நடைபெற்றது. இத்தேர்தலுக்கான வாக்குச்சாவடிகளில் குறைந்தபட்ச அடிப்படை வசதிகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் கோடை காலமாக உள்ளதால் வாக்களிக்க வரும் வாக்காளர்களுக்கு உரிய வசதி ஏற்படுத்தி தர வேண்டும் எனவும் மாவட்ட ஆட்சித்தலைவர், தேர்தல் மேற்பார்வையாளர் மற்றும் (099) ஈரோடு மேற்கு தேர்தல் நடத்தும் அலுவலர் ஆகியோரால் அறிவுறுத்தப்பட்டது. மேலும் தேர்தல் பணியில் ஈடுபடும் வாக்குச்சாவடி அலுவலர்கள் மற்றும் காவலர்கள் இரவு தங்கி பணியாற்ற வேண்டியிருந்ததால் அவர்களுக்கு தேவையான

வசதிகளையும் ஏற்படுத்த வேண்டியிருந்தது. அதற்கிணங்க ஈரோடு மாநகராட்சி மண்டலம் 1-ல் 6 எண்ணிக்கை மாநகராட்சி பள்ளி வளாகங்களில் 30 வாக்குச்சாவடிகளும், 2 எண்ணிக்கை அரசு பள்ளியில் 11 எண்ணிக்கை வாக்குச்சாவடிகளும் என மொத்தம் 8 வளாகங்களில் 41 வாக்குச்சாவடி மையங்களில் தேர்தல் தொடர்பான அடிப்படை வசதிகளான அரசியல் கட்சி சார்புடைய விளம்பரங்களை அழித்தல், மின் சாதனங்கள், மின் விளக்குகள், சாய்வு தளம் (Ramp), தற்காலிகத் தடுப்புகள், எல்லைக்கோடுகள், நிழற்கூடங்கள் உள்ளிட்ட வசதிகள் வாடகை அடிப்படையில் மேற்கொள்ள வேண்டியிருந்தது.

எனவே மேற்படி தேர்தல் பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் (திருத்த) சட்டம் 2022 (தமிழ்நாடு சட்டம் 35.2022) இதன்படி திருத்தப்பட்ட தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998-ன் 57(7)-வது பிரிவின் கீழ் இப்பணியினை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு விலைப்புள்ளிகள் பெறப்பட்டது அதில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய திருவாளர் பாலகுரு இன்ப்ரா, ஒப்பந்ததாரர், ஈரோடு அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்படி பணியை செய்து முடிக்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ. 13,45,724/- ஐ, திருவாளர் பாலகுரு இன்ப்ரா, ஒப்பந்ததாரர், ஈரோடு அவர்களுக்கு வழங்கியதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:-

மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

கோப்பு.எண். இ1-1069-2026(ம-1)

344.) பதிவு செய்யப்பட்டது

134.) ஈரோடு மாநகராட்சி மண்டலம் 1க்குட்பட்ட மேற்கு தொகுதியில் உள்ள பள்ளிகளான ஜவுளி நகர் நடுநிலைப்பள்ளி, இராமநாதபுரம் புதூர் மேல்நிலைப்பள்ளி, இராமநாதபுரம் புதூர் தொடக்கப்பள்ளி, இராயப்பாளையம் மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி மற்றும் ஆர்.என்புதூர் தொடக்கப்பள்ளி ஆக மொத்தம் 5 பள்ளிகளில் உள்ள 19 வாக்கு சாவடிகளில் தேர்தல் தொடர்பான அடிப்படை

வசதிகளான நிழற்கூடைகள் (சாமியானா), வகுப்பறைத் தடுப்பார்கள் வைத்தல், மின்சார வசதி, பிளாஸ்டிக் சேர், டேபிள், வாக்கு சாவடி மையத்திலிருந்து 100 மீட்டர் மற்றும் 200 மீட்டர் தொலைவை குறிக்கும் வரையறை கோடுகள் வரைதல், வாக்குச்சாவடி மையங்களின் முகப்பில் வாக்குச்சாவடி எண் எழுதுதல், வாக்குச்சாவடிகள் அமைத்துள்ள பள்ளி வளாகத்தின் வெளிப்புற முகப்பில் வாக்குச்சாவடி எண்கள் எழுதுதல் மற்றும் மாற்றுத்திறனாளிகள் எளிதில் வாக்கு அளிக்க சாய்வுதளம் அமைத்தல் போன்ற வசதிகளை வாக்குசாவடிகளில் செய்ய தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேற்கண்ட தேர்தலுக்கான அடிப்படை வசதி பணிகளுக்கான செலவுகளை அந்தந்த உள்ளாட்சி நிதியிலிருந்து மேற்கொள்ள ஈரோடு பாராளுமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ந.க.எண்.18000-21/2023-கே1. நாள்.04.04.2024 கடிதத்தில் தெரிவித்துள்ளார்கள். எனவே, பணியினை உடனடியாக மேற்கொள்ளவும் அவசியமாகிறது. எனவே பணியின் அவசர அவசியத்தைக் கருதி தமிழ்நாடு நகர்புர உள்ளாட்சிகளின் சட்டம் 1998-ன் 57(7)-வது பிரிவின் கீழ் இப்பணியை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அவற்றில் குறைந்த விலை விகிதம் வழங்கிய திருவாளர். Balaguru Infra, Erode ஒப்பந்ததாரர் அவர்களின் விலைப்புள்ளி ஏற்று பணியினை முடிக்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ.8,30,399/-ஐ திருவாளர். Balaguru Infra, Erode ஒப்பந்ததாரருக்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

கோப்பு எண்.இ1/ 2088.2024-4 (ம-1)

345.) பதிவு செய்யப்பட்டது

135.) ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்டஆட்சியர் அவர்களின் செயல்முறை கடித ந.க.எண் 1230/2026/அ நாள் 28.03.2026ன் செயல்முறை உத்திரவில் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 நடைபெறுவதைத் தொடர்ந்து அனைத்து வாக்குச்சாவடிகளிலும் மாற்றுத்திறனாளிகள் வாக்களிக்க ஏதுவாக சக்கரநாற்காலிகள் வைக்கவும் அதில் ஈரோடு மாநகராட்சி ஆணையர் அவர்கள் 30 சக்கரநாற்காலிகள் மொத்தம் ரூ.1,48,500-க்கு மாநகராட்சி பொதுநிதியில் இருந்து M.S. Salem R.R.REMEDIES ல் நிறுவனத்திடம் கொள்முதல் செய்து ஈரோடு மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலஅலுவலரிடம் ஒப்படைக்கவும் உத்திரவிடப்பட்டுள்ளது. இந்நிலையில் தேர்தல் நடத்தை விதிகள் அமுலில் உள்ளதால் மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998-ன் 57(7)-ன் கீழ் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் (திருத்த) சட்டம் 2022 பிரிவு 57(7) -வது பிரிவின்படி இப்பணியினை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர், ஈரோடு அவர்களின் மேற்கண்ட் உத்தரவிற்கிணங்க இம்மாநகராட்சி பொதுநிதியிலிருந்து30 எண்ணிக்கையிலான சக்கரநாற்காலிகள் M.S.R.R.REMEDIES சேலம் நிறுவனத்திடமிருந்து ரூ.1,48,500/- செலவினத்தில் கொள்முதல் செய்து ஈரோடு மாற்றுத்திறனாளிகள் அலுவலகத்தில் ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொண்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:.

மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

கோப்பு எண்.இ1/1744/2026(மையம்)

346.) பதிவு செய்யப்பட்டது

136.) தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் இந்திய தேர்தல் ஆணையத்தால் 23.04.2026 அன்று நடைபெற்றது. இத்தேர்தலுக்கான வாக்குச்சாவடிகளில் குறைந்தபட்ச அடிப்படை வசதிகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் கோடை

காலமாக உள்ளதால் வாக்களிக்க வரும் வாக்காளர்களுக்கு உரிய வசதி ஏற்படுத்தி தர வேண்டும் எனவும் மாவட்ட ஆட்சித்தலைவர், தேர்தல் மேற்பார்வையாளர் மற்றும் ஈரோடு கிழக்கு தேர்தல் நடத்தும் அலுவலர் ஆகியோரால் அறிவுறுத்தப்பட்டது. மேலும் தேர்தல் பணியில் ஈடுபடும் வாக்குச்சாவடி அலுவலர்கள் மற்றும் காவலர்கள் இரவு தங்கி பணியாற்ற வேண்டியிருந்ததால் அவர்களுக்கு தேவையான வசதிகளையும் ஏற்படுத்த வேண்டியிருந்தது. அதற்கிணங்க ஈரோடு மாநகராட்சி மண்டலம் 3-ல்7தனியார் பள்ளி வளாகங்களில் 28 வாக்குச்சாவடிகளும், 1 அரசு பள்ளியில் 5 மற்றும் 2 மாநகராட்சி பள்ளி வளாகங்களில்6 வாக்குச்சாவடிகளும்என மொத்தம் 10 வளாகங்களில் 39 வாக்குச்சாவடி மையங்களில் தேர்தல் தொடர்பான அடிப்படை வசதிகளான அரசியல் கட்சி சார்புடைய விளம்பரங்களை அழித்தல்,மின் சாதனங்கள், மின் விளக்குகள், சாய்வு தளம் (Ramp), தற்காலிகத் தடுப்புகள், எல்லைக்கோடுகள், நிழற்கூடங்கள் மற்றும் மாதிரி வாக்குச்சாவடி மையம்உள்ளிட்டவசதிகள் வாடகை அடிப்படையில் மேற்கொள்ள வேண்டியிருந்தது.

எனவே மேற்படி தேர்தல் பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் (திருத்த) சட்டம் 2022 (தமிழ்நாடு சட்டம் 35.2022) இதன்படி திருத்தப்பட்ட தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998-ன் 57(7)-வது பிரிவின் கீழ் இப்பணியினை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு விலைப்புள்ளிகள் பெறப்பட்டது அதில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய திருK.N.பிரசன்னா, ஒப்பந்ததாரர், ஈரோடு அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்படி பணியை செய்து முடிக்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ.11,83,396/- ஐ, திருK.N.பிரசன்னா, ஒப்பந்ததாரர், ஈரோடு அவர்களுக்கு வழங்கியதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

கோப்பு எண்.இ1/1069-1 /2026 (ம-1)

347.) பதிவு செய்யப்பட்டது

137.) நகர்புறங்களில் பருவ நிலை மாற்றம், பசுமை பரப்புகளின் குறைபாடு மற்றும் சுற்றுச்சூழல் அழிவுகள் போன்ற முக்கிய சவால்களை எதிர்கொள்வதற்கான ஒரு முக்கிய சவால்களை எதிர்கொள்வதற்கான முயற்சியாக கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் மற்றும் பூங்காவினை பராமரிக்க ஏதுவாக அம்ருத் சுய உதவிக்குழு நிதி உதவியுடன் நகர்புற பசுமை பூங்காக்களை விரிவுபடுத்த வழிகாட்டு நெறிமுறைகள் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் வெளியிடப்பட்டது. மேற்கண்ட கொள்முதல் நடவடிக்கைகளை பின்பற்றி உயரம் 4 அடிக்கு மேல் மிகாமல் உள்ளவாறும் உள்ளூர் மண்ணின் தன்மைக்கு ஏற்றவாறும் பராமரிக்க ஏதுவாக உள்ளவாறும் கொள்முதல் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. மேற்கண்டவாறு திட்டத்தினை செயல்படுத்த ஏதுவாக சுமார் 2000 மரக்கன்றுகளை நடுவதற்கு இடங்கள் கண்டறியப்பட்டுள்ளதை தொடர்ந்து பணிக்கு தேவையான 2000 மரக்கன்றுகளை ஆந்திரபிரதேத்தில் உள்ள ராஜமுந்திரி மாவட்டத்திலிருந்து கொள்முதல் செய்து ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட சொந்தமான இடங்களில் பத்திரப்படுத்த உத்தேசிக்கப்பட்டது.

மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் (திருத்த) சட்டம் 2022 (தமிழ்நாடு சட்டம் 35.2022) இதன்படி திருத்தப்பட்ட தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998-ன் 57(7)-வது பிரிவின் கீழ் இப்பணியினை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு விலைப்புள்ளிகள் பெறப்பட்டது அதில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய திருK.N.பிரசன்னா, ஒப்பந்ததாரர், ஈரோடு அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்படி பணியை செய்து முடிக்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ.3,64,450/- ஐ, திருK.N.பிரசன்னா, ஒப்பந்ததாரர், ஈரோடு அவர்களுக்கு வழங்கியதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்

கோப்பு எண்.இ2/ 2461 /2025 (ம-1)

348.) பதிவு செய்யப்பட்டது

138.) ஈரோடு மாநகராட்சி மண்டலம் -1 -க்குட்பட்ட வைராபாளையம் உரக்கிடங்கில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் நுண் உரமாக்கும் கிடங்கு அதற்கான அரவை இயந்திரங்கள் நிறுவப்பட்டு மக்கும் கழிவுகளை உரமாக்கும் திட்டம் நடைப்பெற்று வருகிறது. அக்கிடங்கில் 15 வார்டுகளில் சேகராமாகும் கழிவுகளை நுண்ணுராமாக்கல் மையத்தில் உரமாக்கப்பட்டு வந்ததது. அங்கு அமைந்துள்ள எடை போடும் எடை இயந்திரம் (ESSAE Weigh bridge) பழுதடைந்து விட்டது. ஆகவே, அங்கு வரும் கழிவுகளை எடை போட இயலவில்லை. எனவே, திடக்கழிவு மேலாண்மை திட்ட பணியின் அவசியம் கருதி பழுது சரிசெய்ய வேண்டிய அவசியமாகிது. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி இப்பணியினை தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் திருத்த சட்டம் 2022 (தமிழ்நாடு சட்டம் 35 2022) இதன்படி, திருத்தப்பட்ட தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998-ன் 57(7) பிரிவின் கீழ் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அவற்றில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய திருவாளர். பிரசன்னா கான்ட்ரக்டர், ஈரோடு. அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்கண்ட பணிகள் செய்து முடிக்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ.1,39,594.00 /-ஐ திருவாளர். பிரசன்னா கான்ட்ரக்டர், ஈரோடு அவர்களுக்கு வழங்கியதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

கோப்பு எண்.இ2/ 3681 /2026 (ம-1)

349.) பதிவு செய்யப்பட்டது

139.) ஈரோடு மாநகராட்சி மண்டலம் 1 மற்றும் மண்டலம் 2-க்குட்பட்ட பகுதிகளில் KfW மற்றும் சீர்மிகு நகரம் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட பாதாள சாக்கடை திட்ட பணியில் 259.60 கிலோமீட்டர் நீளமுள்ள சேகரிப்பு குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் வீடுகளுக்கு இணைப்பு வழங்கப்பட்டு உபயோகத்தில்

உள்ளது. மண்டலம் 1 மற்றும் மண்டலம் 2-ல் சாலையோர கழிவு நீருந்து நிலையம், (LS) 5 எண்ணிக்கை மூலமாகவும் உப கழிவுநீரேற்று நிலையம் (PS) 6 எண்ணிக்கை மூலமாகவும் சேகரம் செய்து பிரதான கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு செல்லப்படுகிறது.

இந்த கழிவுநீர் சேகரிக்கப்படும் குழாய்கள் இயந்திரக் குழிகள் சாலையோர கழிவு நீரூந்து நிலையங்கள் உப கழிவு நீரேற்று நிலையங்கள் மற்றும் பிரதான கழிவு நீரேற்று நிலையம் உள்ளிட்ட பாதாள சாக்கடை திட்ட கட்டமைப்புகளை தினமும் இயக்கி பராமரிக்க போதிய பணியாளர்கள் தற்பொழுது மாநகராட்சியில் இல்லை.

எனவே வெளி கொணர்வு முகமை மூலம் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அறிவுரையின் படி பணியாளர்களை ஒப்பந்த முறையில் அமர்த்திக் கொள்ள 01.04.2026 முதல் 75 நாட்கள் (2 ½ மாதங்களுக்கு) தயார் செய்யப்பட்ட ரூ.46.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்படி பணிக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டு 15.06.2026 உடன் முடிவடைகிறது. தேர்தல் நடத்தை விதி அமலில் இருந்ததால் மாமன்றத்தின் அனுமதி பெற்று பராமரிப்பு பணி மேற்கொள்வதற்கு புதியதாக ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை எடுக்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. தற்பொழுது தேர்தல் முடிவுற்று தேர்தல் நடத்தை விதிமுறைகள் 07.05.2026 அன்று விலக்கிக் கொள்ளப்பட்ட நிலையில் மேற்படி O & M பணிக்கு மாமன்றத்தின் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளலாம். இந்நிலையில் பொது மக்களின் பொது சுகாதாரத்தைக் கருத்தில் கொண்டு புதிய ஒப்பந்தப்புள்ளி கோரி வேலை உத்திரவு வழங்கும் வரை (அல்லது) 45 நாட்கள் (1 ½ மாதங்கள்) 31.07.2026 வரை தற்போது பாதாள சாக்கடைத் திட்ட O & M பணியினை மேற்கொண்டு வரும் M/S. VNV Builders - நிறுவனத்தின் மூலம் தற்போதுள்ள ஒப்பந்தம் மூலம் அதே விலை விகித்தில் ரூ.27.60 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மாமன்றம் அனுமதி வழங்கலாம்

கோப்பு எண்.இ2/1404/2026 (ம-1)

350.) அனுமதிக்கப்பட்டது.

140.) ஈரோடு மாநகராட்சி மண்டலம் 3 மற்றும் மண்டலம் 4-க்குட்பட்ட பகுதிகளில் KfW மற்றும் சீர்மிகு நகரம் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட பாதாள சாக்கடை திட்ட பணியில் 265.95 கிலோமீட்டர் நீளமுள்ள சேகரிப்பு குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளது மேலும் வீடுகளுக்கு இணைப்பு வழங்கப்பட்டு உபயோகத்தில் உள்ளது சிப்பம் III மற்றும் IV சாலையோர கழிவு நீருந்து நிலையம், (LS) 6 எண்ணிக்கை மூலமாகவும் உப கழிவுநீரேற்று நிலையம் (PS) 5 எண்ணிக்கை மூலமாகவும் சேகரம் செய்து பிரதான கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு செல்லப்படுகிறது.

இந்த கழிவுநீர் சேகரிக்கப்படும் குழாய்கள் இயந்திரக் குழிகள் சாலையோர கழிவு நீருந்து நிலையங்கள் உப கழிவு நீரேற்று நிலையங்கள் மற்றும் பிரதான கழிவு நீரேற்று நிலையம் உள்ளிட்ட பாதாள சாக்கடை திட்ட கட்டமைப்புகளை தினமும் இயக்கி பராமரிக்க போதிய பணியாளர்கள் தற்பொழுது மாநகராட்சியில் இல்லை.

எனவே வெளி கொணர்வு முகமை மூலம் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அறிவுரையின் படி பணியாளர்களை ஒப்பந்த முறையில் அமர்த்திக் கொள்ள 01.04.2026 முதல் 75 நாட்கள் (2 ½ மாதங்களுக்கு) தயார் செய்யப்பட்ட ரூ.49.80 இலட்சம் மதிப்பீட்டில் மேற்படி பணிக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டு 15.06.2026 உடன் முடிவடைகிறது. தேர்தல் நடத்தை விதி அமலில் இருந்ததால் மாமன்றத்தின் அனுமதி பெற்று பராமரிப்பு பணி மேற்கொள்வதற்கு புதியதாக ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை எடுக்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. தற்பொழுது தேர்தல் முடிவுற்று தேர்தல் நடத்தை விதிமுறைகள் 07.05.2026 அன்று விலக்கிக் கொள்ளப்பட்ட நிலையில் மேற்படி O & M பணிக்கு மாமன்றத்தின் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளலாம். இந்நிலையில் பொது மக்களின் பொது சுகாதாரத்தைக் கருத்தில் கொண்டு புதிய ஒப்பந்தப்புள்ளி கோரி வேலை உத்திரவு வழங்கும் வரை (அல்லது) 45 நாட்கள் (1 $^{1/2}$ மாதங்கள்) 31.07.2026 வரை தற்போது பாதாள சாக்கடைத் திட்ட O & M பணியினை மேற்கொண்டு வரும் M/S. VNV Builders - நிறுவனத்தின் மூலம் தற்போதுள்ள

ஒப்பந்தம் மூலம் அதே விலை விகித்தில் ரூ.29.88 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

மாமன்றம் அனுமதி வழங்கலாம்

கோப்பு எண்.இ2/1405/2026 (ம-3)

351.) அனுமதிக்கப்பட்டது.

141.) ஈரோடு மாநகராட்சிமண்டலம் 1 வார்டுஎண் 13 ல் நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான சத்திபிரதான சாலையில் அமைத்துள்ள பாதாள சாக்கடை பிரதான ககழிவுநீர்உந்து குழாயின் ஷட்டர்வால்வு அதன் மட்டத்திலிருந்து கீழ் இறங்கி இருந்ததால் அருகில் உள்ள மல்லிநகர் பாதாள சாக்கடை பம்பிங்ஸ்டேஷனில் கழிவுநீர் உந்து செல்வதில் தடை ஏற்பட்டு இருந்தது. இதன் காரணமாக மாணிக்கம்பாளையம் பகுதியில் கழிவுநீர் தேக்கம் ஏற்பட்டு சாலைகளில் கழிவுநீர் வழிந்தோடி சுகாதாரக்கேடு ஏற்படும் சூழ்நிலை ஏற்பட்டது. இந்நிலையில் பழுதடைந்த மேற்படி வால்வு சத்தி பிரதானசாலையில் CNC கல்லூரிக்கு எதிரில் சாலையின் நடுவில் இருப்பது கண்டறியப்பட்டது. அதனைத் தொடர்ந்து மேற்படி பழுதடைந்த வால்வினை சீரமைக்கும் பொருட்டு பிரதான சாலையை வெட்டி பணி மேற்கொள்ளவும் பின்னர் வெட்டப்பட்ட சாலை சீரமைத்து தரப்படும் என்ற உத்தரவாதத்தின்படி நெடுஞ்சாலைதுறையின் அனுமதிபெறப்பட்டுள்ளது. எனவே CNC கல்லூரிக்கு எதிரில் நெடுஞ்சாலையின் நடுவில் அமைத்துள்ள பாதாளசாக்கடை கழிவுநீரேற்றம் செய்யும் பிரதான வல்வினை சீரமைக்கவும் பின்னர் இப்பணிக்காக தோண்டப்பட்ட சாலையை சீரமைக்கும் பணியினை உடனடியாக மேற்கொள்ள வேண்டியிருந்தது.. பொதுசுகாதாரத்தை பேணிக்காக்கும் பொருட்டும் பொது போக்குவரத்தை தடையின்றி செயல்படுத்தவும் தேவையான இப்பணியின்அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் திருத்த சட்டம் 2022 (தமிழ்நாடு சட்டம் 35 2022) இதன்படி, திருத்தப்பட்ட தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998-ன் 57(7) பிரிவின் கீழ் இப்பணியினை மேற்கொள்ள

உத்தேசிக்கப்பட்டு விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அவற்றில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய திருவாளர். M/S. Thayi Infra Projects Solutions, ஒப்பந்ததாரர், ஈரோடு. அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்கண்ட பணிகள் செய்து முடிக்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ.3,18,113.00/-ஐ திருவாளர். M/S.Thayi Infra Projects Solutions, ஒப்பந்ததாரர், ஈரோடு அவர்களுக்கு வழங்கியதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

கோப்பு எண். இ2/ 381/ 2026 (ம-1)

352.) பதிவு செய்யப்பட்டது

142.) ஈரோடு மாநகராட்சி - ஓராண்டு குத்தகை இனம் - நேதாஜி தினசரி சந்தை வாளகம் வ.உ.சி பூங்கா மைதானத்தில்

பொருள் : அமைக்கப்பட்டுள்ள தற்காலிக தினசரி சந்தை (01.04.2025 to 31.03.2028) உரிமம் - உச்ச கேள்விதாரர் திரு. டி. பிரவின் என்பவருக்கு குத்தகை விடப்பட்டது - திரு. டி. பிரவின் குத்தகைதாரர் 15.01.2026 அன்று காலமானது - அன்னாரின் வாரிசுதாரரும் மனைவியுமான திருமதி. பி. வித்யா என்பவருக்கு குத்தகை உரிமம் பெயர் மாற்றம் செய்து உரிமம் வழங்குதல் - மாமன்ற அனுமதி வழங்க கோருதல் - தொடர்பாக.

பார்வை : 1. மாமன்ற தீர்மான எண். 129 , நாள்.30.04.2025

2. இதே எண்ணிட்ட இவ்வலுவலக திரு.டி.பிரவீன் என்பவருக்கு உரிமம் ஒப்படை செய்யப்பட்ட செயல்முறை உத்திரவு நாள். 31.03.2025

3. இதே எண்ணிட்ட இவ்வலுவலக அறிவிப்பு கடித நாள். 31.10.2025

4. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, அரசாணை(நிலை) எண்.480, நாள்.16.12.2025.

5. தமிழ்நாடு அரசிதழ் சிறப்பு அறிவிக்கை எண்.836, நாள்.16.12.2025.

6. திரு. டி. பிரவின், குத்தகைதாரர் இறப்புச் சான்று.

7. மாமன்றத் தீர்மானம் எண். 588 நாள். 31.12.2025 .

8. இதே எண்ணிட்ட இவ்வலுவலக அறிவிப்பு கடித நாள்.
13.02.2026

9. திருமதி. வித்யா என்பவரின் விண்ணப்பம் நாள். 14.03.2026

.....

ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட ஓராண்டு குத்தகை இனமான வ.உ.சி. பூங்கா மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ள நேதாஜி தினசரி சந்தை 01.04.2025 முதல் 31.03.2028 முதல் 3 ஆண்டுகளுக்கு ஆண்டு குத்தகை தொகை ரூ. **2,70,28,000** அடிப்படையில் பார்வை 2 ல் காணும் உத்திரவு மூலம் திரு. டி. பிரவீன் என்பவருக்கு ஒப்படை செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் குத்தகைதாரர் திரு. டி . பிரவீன் என்பவர் கடந்த 15.01.2026 அன்று காலமாகிவிட்டார்.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.480, (MA.IV) நாள்.16.12.2025-ன் படி மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023 தமிழ்நாடு அரசிதழ் எண்.836, நாள்.16.12.2025 ன் படி V **"குத்தகைதாரரின் சட்டப்பூர்வ வாரிசுகள், நிலுவையில் உள்ள அனைத்துத் தொகைகளையும் செலுத்தி, அவ்வப்போது மாநகராட்சியால் நிர்ணயிக்கப்படும் குத்தகைத் தொகையைச் செலுத்த ஒப்புக்கொண்டு, குத்தகை உரிமைகளை குத்தகைதாரரின் வாரிசுதாரர் பெயருக்கு மாற்றக் கோரும்பட்சத்தில், பெயர் மாற்றத்திற்கான கட்டணமாக ரூ.5000/- வசூலிக்க நிர்ணயிக்கப்பட்டுள்ளது "**

எனவே திரு.டி. பிரவீன் குத்தகைதாரர் காலமானதை தொடர்ந்து, பார்வை 7 இல் காணும் விண்ணப்பத்தில், குத்தகைதாரரின் வாரிசுதாரரும் மனைவியுமான திருமதி . பி. வித்யா என்பவர் மேற்கண்ட விதிகளின் படி , குத்தகை உரிமத்தினை பெயர் மாற்றம் செய்து தரக்கோரி விண்ணப்பம் செய்துள்ளார். பெயர் மாற்றக் கட்டணமாக ரூ. 5000/- செலுத்தியுள்ளார். முதலாம் ஆண்டு குத்தகை தொகை வசூல் செய்யப்பட்டுள்ள விவரங்கள் கீழ்க்காணுமாறு

வ. எண்	விபரம்	தொகை ரூ.	
1	ஏல வைப்புத் தொகை	1,00,00,000/–	செலுத்தப்பட்டது (சரி கட்டப்பட்டது)
2	(2025-2026 முதலாம் ஆண்டு) ஒரு வருட குத்தகை தொகை ரூ. 2,70,28,000/–	48,74,000/– 50,00,000/– 25,00,000/– 46,54,000/–	செலுத்தப்பட்டது (சரி கட்டப்பட்டது) 26.09.2025 செலுத்தப்பட்டது 29.11.2025 செலுத்தப்பட்டது. 14.03.2026 செலுத்தப்பட்டது.
	மொத்தம்	**2,70,28,000/–**	
	பெயர் மாற்றக் கட்டணம் தொகை	**5000/–**	14.03.2026 செலுத்தப்பட்டது.

	அன்னாரின் வாரிசுதாரரும் மனைவியுமான திருமதி. பி. வித்யா		
	(2026-2027 இரண்டாம் ஆண்டு புதுப்பித்தது) குத்தகை தொகை ரூ. 2,83,79,400/–	1,41,89,700/–	14.03.2026 செலுத்தப்பட்டது.

மேற்படி ஓராண்டு குத்தகை இனமான வ.உ.சி. பூங்கா மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ள நேதாஜி தினசரி சந்தையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் முதலாம் ஆண்டு குத்தகை உரிமத் தொகை நிலுவையின்றி செலுத்தப்பட்டுள்ளது. மேலும், 01.04.2026 முதல் 31.03.2027 வரையிலான இரண்டாம் ஆண்டிற்கு குத்தகை உரிமத் தொகை ரூ. 20 இலட்சத்திற்கு மேல் உள்ளதால் குத்தகை தொகையை குத்தகை சிறப்பு நிபந்தனைகளின் படி 50 சதவீதம் தொகை ரூ. 1,41,89,700/– வசூல் செய்யப்பட்டுள்ளது மற்றும் பெயர் மாற்றக் கட்டணம் தொகை ரூ. 5000/- செலுத்தப்பட்டுள்ளது. (2025-2026 ஆம் ஆண்டு குத்தகை நிபந்தனைகளின் படி மீதமுள்ள குத்தகை தொகையை ஆறு தவணைகளாக பிரதி மாதம் செலுத்த வேண்டும்.)

எனவே மேற்படி ஓராண்டு குத்தகை இனமான வ.உ.சி. பூங்கா மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ள நேதாஜி தினசரி சந்தையில் கட்டணம் வசூலிக்கும் உரிமத்தினை காலமான குத்தகைதாரர் திரு. டி. பிரவீன் என்பவரின் வாரிசுதாரரும் மனைவியுமான திருமதி. பி. வித்யா என்பவரின் பெயருக்கு மாற்றம் செய்து 01.04.2026 முதல் 31.03.2028 வரை குத்தகை உரிமம் ஒப்படைக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :-

மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்:- அ1/489/2024 (மையம்)

353.) அனுமதிக்கப்பட்டது.

143.) : ஈரோடு மாநகராட்சி - ஓராண்டு குத்தகை இனங்கள் - மறு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி - 05.03.2026 அன்று நடைபெற்றது - உச்ச ஏலக் கேள்வி கோரியவர்களுக்கு குத்தகை உரிமம் வழங்குதல் - மாமன்றத்தின் அனுமதி வேண்டுதல் - தொடர்பாக.

பொருள்

பார்வை : பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நாள்:- 05.03.2026

இம்மாநகராட்சி 2026 - 2027 ஆம் ஆண்டுக்கான கீழ்கண்ட ஓராண்டு மற்றும் மூன்றாண்டு குத்தகை இனங்கள் மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 05.03.2026 அன்று காலை 11.30 மணிக்கு பிரதான அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு கீழ்கண்டவாறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார்கள்.

வரிசை எண்	குத்தகையினம்	கலந்து கொண்ட ஏலதாரர்கள்	ஏலதாரர் பெயர் திரு.	ஏலக் கேள்வி தொகை ரூ.
1	**ஓராண்டு குத்தகை இனம்** சிலம்பரான் குட்டை கிழக்கு பகுதியில் உள்ள காலியிடம் இரு சக்கர / நான்கு சக்கர வாகனம் நிறுத்துமிடம்	2 ஏல வைப்புத் தொகை ரூ. 2,50,000/-	பி.எஸ். சரவணக்குமார்	ரூ. 3,00,000/ (ஒப்பந்தப்புள்ளி) ரூ. 2,70,000/- (ஏலக் கேள்வி)
			ஆர். மின்னல் முருகேஷ்	**ரூ. 3,06,000/- (ஒப்பந்தப்புள்ளி)** ஏலக் கேள்வி இல்லை.
2	**மூன்றாண்டு குத்தகை இனம்** நேதாஜி வணிக வளாக முதல்தளக் கடை எண்.50	1 ஏல வைப்புத் தொகை ரூ. 1,00,000/-	ராஜேந்திரன் த/பெ. ராமசாமி	ரூ. 6100/- (ஏலக் கேள்வி) ஒப்பந்தப்புள்ளி ஏதும் பெறப்படவில்லை.

மேற்காண் பட்டியலில் வரிசை எண். 1 இல் குறிப்பிட்டுள்ள ஓராண்டு குத்தகை இனமான சிலம்பரான் குட்டை கிழக்கு பகுதியில் உள்ள காலியிடத்தில் இரு சக்கர / நான்கு சக்கர வாகனம் நிறுத்துமிடம் உரிமத்திற்கு திரு. ஆர். மின்னல் முருகேஷ் என்பவர் ஒப்பந்தப்புள்ளியில் உச்ச ஏலக் கேள்வி தொகையாக **ரூ. 3,06,000/-** கோரியுள்ளார். இது அரசாங்க மதிப்பு ரூ. 2,50,000/- யை விட கூடுதலாக உள்ளது. எனவே இவ்உச்ச கேள்வியினை ஏற்று திரு. ஆர். மின்னல் முருகேஷ் என்பவருக்கு ஒப்படை செய்யும் நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு குத்தகை உரிமம் ஒப்படை செய்யலாம்.

வரிசை எண். 2 இல் குறிப்பிட்டுள்ள நேதாஜி வணிக வளாக முதல்தளக் கடை எண்.50 ற்கு திரு. ராஜேந்திரன் த/பெ. ராமசாமி என்பவர் கலந்து கொண்டு பொது ஏலத்தில் உச்ச ஏலக் கேள்வி தொகையாக ரூ. 6100/- கோரியுள்ளார். அரசாங்க மதிப்பு ரூ. 6000/- யை விட சற்று கூடுதலாக உள்ளது. இக்கடை ஏலம் ஏதும் போகாமல் கடந்த 2 ஆண்டுகளாக காலியாக உள்ளது. எனவே இவ்உச்ச கேள்வியினை ஏற்று திரு. ராஜேந்திரன் ,த/பெ. ராமசாமி என்பவருக்கு ஒப்படை செய்யும் நாள் முதல் பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு குத்தகை உரிமம் ஒப்படை செய்யலாம்.

பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்படாத இதர இனங்களை மீண்டும் மறு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரவும், அதற்கான விளம்பர செலவினங்களை ஏற்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :-

மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்:- அ1/103/2026(மையம்)

354.) அனுமதிக்கப்பட்டது

144.) **பொருள் :** ஈரோடு மாநகராட்சி - ஓராண்டு குத்தகை இனங்களுக்கு - முதலாம் ஆண்டு உரிமம் 5 % உயர்வு செய்து நீட்டிப்பு செய்தல் - உரிமம் புதுப்பித்தல் தொடர்பாக.

பார்வை: நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடித ந.க.எண். 781/ஆர்-2/2025, நாள். 06.02.2025

ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள கீழ்காணும் குத்தகை இனங்களுக்கு 30.04.2025 மற்றும் 31.05.2026 உடன் முதலாம் ஆண்டு உரிம காலம் முடிவடைகிறது. இவ்வினங்களுக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கையின்படி, சென்ற ஆண்டு குத்தகை தொகையில் 5% உயர்வு செய்து

குத்தகைதாரருக்கு இரண்டாம் ஆண்டு குத்தகை தொகை நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

01.05.2026 முதல் 30.04.2027 வரை இரண்டாம் ஆண்டு நீட்டிப்பு					
வ.எண்	உரிமதாரர் பெயர் திரு / திருமதி	ஏல இனங்கள்	2025 - 2026 (01.05.2025 30.04.2026) முதலாம் ஆண்டு குத்தகை தொகை	5% உயர்வுத் தொகை ரூ.	01.05.2026 முதல் 30.04.2027 வரை (இரண்டாம் ஆண்டு நீட்டிப்பு) குத்தகை தொகை ரூ.
1	ஜே. குணசேகரன்	வஉசி. பூங்கா சிறுவர் பூங்காவில் நுழைவுக் கட்டணம் வசூலிக்கும் உரிமம்.	4,50,000/-	22500/-	**4,72,500/-**
2	ஜே. குணசேகரன்	வஉசி பூங்காவில் நுழைவுக் கட்டணம் வசூலிக்கும் உரிமம்	8,26,000/-	41300/-	**8,67,300/-**
01.06.2026 முதல் 31.05.2027 வரை இரண்டாம் ஆண்டு நீட்டிப்பு					
3	கே. சுப்ரமணியம்	பேருந்து நிலைய அருகில் உள்ள வி.சி.டி.வி. ரோடு மாநகராட்சி திருமண மண்டபம்	(01.06.2025 31.05.2026) முதலாம் ஆண்டு 7,80,600/-	39030/-	01.06.2026 முதல் 31.05.2027 வரை (இரண்டாம் ஆண்டு நீட்டிப்பு) **8,19,630/-**

மேற்காண் பட்டியலில் குறிப்பிட்டுள்ளவாறு 2026 -2027 ஆம் ஆண்டுக்கு 5% உயர்வு செய்து குத்தகை உரிமம் புதுப்பித்து உரிம நீட்டிப்பு வழங்கவும், உயர்வு செய்யப்பட்ட குத்தகை உரிம தொகையை குத்தகைதாரரிடமிருந்து வசூலிக்கவும், மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண். அ1/489/2024 (மையம்)

355.) அனுமதிக்கப்பட்டது

145.)ஈரோடு மாநகராட்சியில் மொத்தம் 11 அம்மா உணவகங்கள் செயல்பட்டு வருகின்றன. செய்தி வெளியீடு எண்.040 நாள்.18.05.2026 ல் மாண்புமிகு தமிழக

முதலமைச்சர் அவர்கள் தமிழகம் முழுவதும் உள்ள மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் செயல்பட்டு வரும் அம்மா உணவகங்களின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும். பழுதடைந்த சமையல் உபகரணங்களை உடனடியாகக் கொள்முதல் செய்து பொதுமக்களுக்குத் தரமான, சுவையான உணவு தடையின்றி கிடைப்பதை உறுதி செய்யவும் உத்தரவிட்டுள்ளார்கள். மேலும், இச்சீரமைப்புப் பணிகளுக்கான செலவினங்களை அந்தந்த மாநகராட்சி மற்றும் நகராட்சியின் பொது நிதியிலிருந்து (General Fund) மேற்கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் அவர்களின் ந.கஎண்.2807/மா.நா.1/2026-1 நாள்.18.05.2026 கடிதத்தில் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தலின்படி, ஈரோடு மாநகராட்சி மண்டலம் 4-க்குட்பட்ட பூந்துறை சாலையில் அமைந்துள்ள அம்மா உணவகம் கட்டி முடிக்கப்பட்டு 13 ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையில், பின்வரும் பழுதுகள் கண்டறியப்பட்டு, உடனடியாகச் சீரமைக்க வேண்டியுள்ளது, எனவே இக்கட்டிடத்தின் பல இடங்களில் சுவர்கள் பழுது ஏற்பட்டுள்ளன. தரை மற்றும் கழிவறைகளில் பதிக்கப்பட்ட டைல்ஸ்கள், பீங்கான்கள் சிதலமடைந்துள்ளன. சமையலறை மற்றும் பாத்திரங்கள் கழுவும் இடம் தண்ணீர் வெளியேற வழியின்றி தரைதளம் பழுது ஏற்பட்டுள்ளதால், சமையல் பணியாளர்கள் பணி செய்ய மிகவும் சிரமப்பட்டு வருகின்றனர். மேலும், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் இயந்திரம் (RO Plant) பழுதடைந்துள்ளது. உணவு சமைப்பதற்கும் பரிமாறுவதற்கும் தேவையான பக்கெட், டம்ளர், பிளாஸ்டிக் ஸ்டூல் மற்றும் குளிர்சாதனப் பெட்டி (Fridge) போன்ற பொருட்களும் பழுதடைந்துள்ளன. எனவே, மேற்படி அம்மா உணவகக் கட்டிடத்தைப் பழுதுபார்த்து, சீரமைத்து, வர்ணம் பூசவும், சமையலறைக்குத் தேவையான தளவாடப் பொருட்களை வாங்கவும் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.10.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்.இ1/678/2026 (மையம்)

356.) அனுமதிக்கப்பட்டது

146.)ஈரோடு மாநகராட்சி மண்டலம் – 3 வார்டு எண். 30 க்குட்பட்ட காரப்பாறை பகுதியில் நகர்புற நலவாழ்வு மையம் திறப்பு விழா 03/07/2025 அன்று நடைபெற்றது. இவ்விழாவில் நகர்புற நலவாழ்வு மையக்கட்டிடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொளி வாயிலாக திறந்து வைத்தார். இவ்விழாவிற்கு மாண்புமிகு வீட்டுவசதி துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர், உயர்திரு மாவட்ட ஆட்சித்தலைவர், மாண்புமிகு மேயர், துணை மேயர் மற்றும் மாநகராட்சி ஆணையாளர் ஆகியோர் கலந்து கொண்டு விழா சிறப்பாக நடைபெற்றது மேற்கண்ட திறப்பு விழாவிற்கு தேவையான அடிப்படை வசதிகளான சாமியான பந்தல், டேபிள், சேர், குடிநீர், ஒளி ஒலி அமைப்புகள் மற்றும் பேனர்கள் அமைத்தல் போன்ற வசதிகளை மேற்கொள்ள மாநகர நல அலுவலர் அவர்களால் குறிப்பு வழங்கப்பட்டது. எனவே மேற்படி பணிகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டது. எனவே மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி பணியினை தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் (திருத்த சட்டம் 2022 தமிழ்நாடு சட்டம் 35/2022) இதன்படி திருத்தப்பட்ட தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998-ன் 57 (7) வது பிரிவின் கீழ் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய திருவாளர். TE YELLOW CITY BUILDERS, ஒப்பந்ததாரர் ஈரோடு அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்படி பணியை செய்து முடிக்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ.3,22,040/- ஐ, திருவாளர். TE YELLOW CITY BUILDERS, ஒப்பந்ததாரர், ஈரோடு அவர்களுக்கு வழங்கியதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

கோப்பு எண். இ1/ 699 /2025(ம-3)

357.) பதிவு செய்யப்பட்டது.

147.) ஈரோடு மாநகராட்சி மண்டலம் – 3 வார்டு எண். 30 க்குட்பட்ட காரப்பாறை மற்றும் புதுக்காலனி ஆகிய பகுதிகளில் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக பொதுக்கழிப்பிடம் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் இருந்து வந்தது. தற்போது மேற்கண்ட பொதுக்கழிப்பிடத்தில் பழுது ஏற்பட்டு பொதுமக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் இருந்தது. இந்நிலையில் மாண்புமிகு வீட்டுவசதி துறை அமைச்சர் அவர்களின் கள ஆய்வின்போது மேற்படி பகுதி மக்களின் கேரிக்கையை ஏற்று உடனடியாக இக்கழிப்பிடங்களை பராமரிப்பு செய்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர அறிவுறுத்தினார்கள். எனவே மேற்கண்ட பொதுக்கழிப்பிடத்தில் உள்ள பழுதுகளை சரிசெய்து வர்ணம் பூசி உடனடியாக பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டவர வேண்டிய அவசியம் ஏற்பட்டது. எனவே மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி பணியினை தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் (திருத்த சட்டம் 2022 தமிழ்நாடு சட்டம் 35/2022) இதன்படி திருத்தப்பட்ட தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998-ன் 57 (7) வது பிரிவின் கீழ் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய திருவாளர். TE YELLOW CITY BUILDERS, ஒப்பந்ததாரர் ஈரோடு அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்படி பணியை செய்து முடிக்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ.7,89,059/- ஐ, திருவாளர். TE YELLOW CITY BUILDERS, ஒப்பந்ததாரர், ஈரோடு அவர்களுக்கு வழங்கியதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

கோப்பு எண்.6275.2025 (ம-3)

358.) பதிவு செய்யப்பட்டது

148.) ஈரோடு மாநகராட்சி மண்டலம் – 3 வார்டு எண். 48 க்குட்பட்ட MSK நகர் கருப்பராயன் கோவில் அருகில் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக பொதுக்கழிப்பிடம் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் இருந்து வந்தது. மேற்கண்ட பொதுக்கழிப்பிடத்தில் பழுது

ஏற்பட்டு பொதுமக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் இருந்தது. இந்நிலையில் மாண்புமிகு வீட்டுவசதி துறை அமைச்சர் அவர்களின் கள ஆய்வின்போது மேற்படி பகுதி மக்களின் கேரிக்கையை ஏற்று உடனடியாக இக்கழிப்பிடங்களை பராமரிப்பு செய்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர அறிவுறுத்தினார்கள். எனவே மேற்கண்ட பொதுக்கழிப்பிடத்தில் உள்ள பழுதுகளை சரிசெய்து வர்ணம் பூசி உடனடியாக பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டவர வேண்டிய அவசியம் ஏற்பட்டது. எனவே மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி பணியினை தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் (திருத்த சட்டம் 2022 தமிழ்நாடு சட்டம் 35/2022) இதன்படி திருத்தப்பட்ட தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998-ன் 57 (7) வது பிரிவின் கீழ் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய திருவாளர். TE YELLOW CITY BUILDERS, ஒப்பந்ததாரர் ஈரோடு அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்படி பணியை செய்து முடிக்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ.3,89,691/- ஐ, திருவாளர். TE YELLOW CITY BUILDERS, ஒப்பந்ததாரர், ஈரோடு அவர்களுக்கு வழங்கியதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

பார்வையிட்டு பதிவு செய்யலாம்

கோப்பு எண்.6275.2025-1 (ம-3)

359.) பதிவு செய்யப்பட்டது

149.) ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம்-3 வார்டு எண். 45 பெரியார் நகர் கழிவுநீரேற்று நிலையத்தில் (MPS-1) பின்புறம் பொது மக்கள் உபயோகத்தில் உள்ள ஆழ்துளை குழாய் கிணறு மின்மோட்டார் பழுது ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து மேற்படி மோட்டார் பழுதுநீக்கும்போது அம்மோட்டார் கழண்டு ஆழ்துளை குழாய்கிணற்றில் அடிஆழத்திற்கு சென்று சேற்றில் சிக்கிவிட்டது. இதனால் அப்பகுதியில் வாழும் சுமார் 250 குடும்பங்களுக்கு தண்ணீர் வழங்க இயலாமல் இருந்து நிலையில், இப்பகுதி மக்களின் தண்ணீர் தேவையைக் கருத்தில் கொண்டு மேற்படி ஆழ்துளை கிணற்றில் உடனடியாக புதிதாக 7.50 HP மின்மோட்டார் வாங்கி பொருத்தி சீரான தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, பொதுமக்களின்

நலன்கருதி பணியின் அவசர அவசியம் கருதி இப்பணியினை தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் திருத்தசட்டம் 2022 (தமிழ்நாடு சட்டம் 35 2022) இதன்படி திருத்தப்பட்ட தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998-ன் 57(7) வதுபிரிவின்கீழ் இப்பணியினை மேற்கொள்ள உத்தேசமதிப்பீட்டுத் தொகை ரூ2.40 இலட்சத்திற்கு, விலைப்புள்ளிகள்பெறப்பட்டது. அவற்றில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய திருவாளர். Mr.V.Dhamodharan, Erode அவர்களின் விலைப்புள்ளியினை ஏற்று பணிமேற்கொள்ளப்பட்டு வருவதையும் ,இப்பணி முடிவுற்ற பின்னர், மேற்படி பணிக்கானபட்டியல்தொகை, வழங்கப்படும் என்ற விபரத்தையும் மாமன்றத்தின் பார்வைக்கு பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக்குறிப்பு:

மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

கோப்பு.எண். இ2/1648/2026(ம-3)

360.) பதிவு செய்யப்பட்டது

150.) ஈரோடு மாநகராட்சி மண்டலம்-3 க்குட்பட்டவார்டு எண்.44 மீனவர் குடியிருப்பு மக்கள் நெருக்கம் அதிகம் உள்ள பகுதியில் சமுதாய கழிப்பிடம் மிகவும் பழுதடைந்து இடிந்துவிழும் நிலையில்உள்ளது. எனவே மேற்கண்ட இடத்தில் கழிப்பிடம் கட்டுவதற்கு காலதாமதம் ஏற்படும் என்ற காரணத்தால் பொது மக்களின் சுகாதார நலன் கருதி கழிப்பிடத்திற்கு செல்ல ஏதுவாக மீனவர் காலனியில் 6 எண்ணிக்கையிலான தயார் நிலையில் உள்ள கழிப்பிடம் அமைக்க வேண்டியது அவசியமாகிறது. எனவே பணியின் அவசரஅவசியம் கருதி ஆணையர்அவர்களின் அனுமதி பெற்று தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் (திருத்த) சட்டம் 2022 (தமிழ்நாடு சட்டம் 35/2022) இதன்படி திருத்தப்பட்ட தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998 –ன் 57(7) – வது பிரிவின் கீழ் இப்பணியினை மேற்கொள்ளஉத்தேசமதிப்பீட்டுத் தொகை ரூ,6.90 இலட்சத்திற்கு விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய திருவாளர். வெற்றி கன்ஸ்ட்ரக்ஷன், ஈரோடு அவர்களின் விலைப்புள்ளியினை ஏற்றுபணி மேற்கொள்ளப்பட்டு வருவதையும், இப்பணி

முடிவுற்ற பின்னர், மேற்படி பணிக்கான பட்டியல் தொகை, வழங்கப்படும் என்ற விபரத்தையும் மாமன்றத்தின் பார்வைக்கு பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக்குறிப்பு:

மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

கோப்பு எண்.இ1/3666./2025 (ம-3)

361.) பதிவு செய்யப்பட்டது

151.) ஈரோடு மாநகராட்சி - மூன்றாண்டு குத்தகை இனங்கள் – ஒப்படைப்பு செய்யப்பட்டது - மேற்படி ஒப்படைப்பு செய்யப்பட்ட கடைகளை பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டுதல் - தொடர்பாக.

பொருள் :

பார்வை : உரிமதாரர்களின் விண்ணப்பம்.

******

பார்வையில் கண்டுள்ள உரிமதாரர்களின் கடிதங்களில் ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட கனிமார்க்கெட் வணிக வளாகம் தரைதளம், முதல்தளம், மூன்றாம் தளம் கடைகள் மற்றும் சோலார் புதிய பேருந்து நிலைய வணிக வளாக கடைகளில் வியாபாரம் சரிவர நடைபெறாத காரணத்தினாலும், மாதாந்திர வாடகை தொகை செலுத்த இயலாத காரணத்தினாலும் கடைகளை திரும்ப ஒப்படைப்பு செய்வதாக தெரிவித்துள்ளார்கள். விபரம் பின்வருமாறு.

வ. எண்	உரிமதாரர்கள் பெயர்	கடையின் பெயர் மற்றும் கடை எண்	ஒப்படை செய்யப்பட்ட உரிம காலம்	விண்ணப்ப நாள்
1.	ஆர்.நாகஜோதி	கனிமார்க்கெட் முதல்தளக் கடை எண். 152 (056/SC03/01139)	01.02.2024 முதல் 31.01.2027 வரை	18.03.2026
2.	எம்.சம்பத்	கனிமார்க்கெட் முதல்தளக் கடை எண். 128 (056/SC03/01098)	01.09.2024 முதல் 31.08.2027 வரை	18.03.2026
3	எஸ்.செந்தில்குமார்	கனிமார்க்கெட் மூன்றாம் தளக் கடை எண். 373 (056/SC03/00993)	01.04.2024 முதல் 31.03.2027 வரை	23.03.2026

4.	எஸ்.செந்தில்குமார்	கனிமார்க்கெட் மூன்றாம் தளக் கடை எண். 372 (056/SC03/00994)	01.04.2024 முதல் 31.03.2027 வரை	24.03.2026
5.	ஆர்.இளங்கோ	கனிமார்க்கெட் தரைத்தளக் கடை எண். 14 (056/SC03/00826)	01.02.2024 முதல் 31.01.2027 வரை	28.04.2026
6.	எஸ்.ஸ்ரீமன்	கனிமார்க்கெட் முதல்தளக் கடை எண். 185 (056/SC03/00975)	01.05.2024 முதல் 30.04.2027 வரை	29.04.2026
7.	ஆர்.செந்தில்குமார்	ஆர்.கே.வி ரோடு ஐ.டி.எஸ்.எம்.டி திட்டக் கடை எண். 79 (056/BD01/00125)	01.08.2023 முதல் 31.07.2026 வரை	12.05.2026
8.	எஸ்.விமலா தேவி	காமராஜ் ரோடு வணிக வளாக தரைத்தளக் கடை எண்.8 (056/BD01/00659)	01.12.2024 முதல் 30.11.2026 வரை	12.05.2026
9.	ஆர்.பாலசுப்ரமணி	சோலார் புதிய பேருந்து நிலைய வணிக வளாக கடை எண். 12		17.04.2026

வ.எண். 9 – ல் கண்டுள்ள திரு. ஆர்.பாலசுப்ரமணி என்பவர் 10.12.2025 அன்று நடைபெற்ற பொது ஏலத்தில் கலந்து கொண்டு ஏல வைப்புத் தொகை ரூ.7,00,000/- செலுத்தி மண்டலம் - 4 க்குட்பட்ட சோலார் பேருந்து நிலைய கடை எண். 12 – யை உச்ச ஏலக் கேள்வி தொகை ரூ.18800/- க்கு ஏலம் கோரி கடை எடுத்துள்ளார். மேற்படி மாமன்ற தீர்மானத்தில் அனுமதி வழங்கியதன் படி கடையினை ஒப்படைப்பு செய்ய 12 மாத வாடகை முன் வைப்புத் தொகை மற்றும் மின் இணைப்பு வைப்புத் தொகை செலுத்தக் கோரி அறிவிப்பு வழங்கப்பட்டது. நாளது தேதிவரை குத்தகைதாரர் தொகையை செலுத்தாமல் உள்ளார்.

சோலார் பேருந்து நிலையத்திற்கு வந்து செல்லும் பேருந்துகள் குறைவான எண்ணிக்கையில் உள்ளதால் அதிக எண்ணிக்கையில் பேருந்துகள் வரும் பட்சத்தில் குத்தகைதாரர் வாடகை முன் வைப்புத் தொகை செலுத்துவதாக தெரிவித்தார். தற்போது சோலார் பேருந்து நிலைய கடை எண். 12 – யை குத்தகைதாரர் பொறுப்பேற்காமல் கடையை மாநகராட்சி வசம் திரும்ப ஒப்படைப்பு செய்தும், குத்தகைதாரர் செலுத்திய ஏல வைப்புத் தொகையை திரும்ப வழங்குமாறும் கோரியுள்ளார்.

மேற்கண்டுள்ளவாறு கடைகளின் உரிமதாரர்கள் கடைகளில் வியாபாரம் சரிவர நடைபெறாத காரணத்தினால் மாநகராட்சிக்கு திரும்ப உரிம இனங்களை ஒப்படைப்பு செய்துள்ளார்கள். மேற்படி குத்தகை உரிம இனங்களுக்கு உரிமதாரர்களால் மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய வாடகைத் தொகையினை அவர்கள் செலுத்தியுள்ள வைப்புத் தொகையில் இருந்து சரிகட்டவும், குத்தகை உரிமத்தை ரத்து செய்யவும், பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரவும், குத்தகைதாரர்கள் செலுத்திய ஏல வைப்புத் தொகையை திரும்ப வழங்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண். அ2/1609/2024/ (மையம்)

362.) அனுமதிக்கப்பட்டது.

152,) ஈரோடு மாநகராட்சியில் மொத்தம் 11 அம்மா உணவகங்கள் செயல்பட்டு வருகின்றன. செய்தி வெளியீடு எண்.040 நாள்.18.05.2026ல் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தமிழகம் முழுவதும் உள்ள மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் செயல்பட்டு வரும் அம்மா உணவகங்களின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும். பழுதடைந்த சமையல் உபகரணங்களை உடனடியாகக் கொள்முதல் செய்து பொதுமக்களுக்குத் தரமான, சுவையான உணவு தடையின்றி கிடைப்பதை உறுதி செய்யவும் உத்தரவிட்டுள்ளார்கள். மேலும், இச்சீரமைப்புப் பணிகளுக்கான செலவினங்களை அந்தந்த மாநகராட்சி மற்றும் நகராட்சியின் பொது நிதியிலிருந்து (General Fund) மேற்கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் அவர்களின் ந.கஎண்.2807/மா.நா.1/2026-1 நாள்.18.05.2026 கடிதத்தில் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தலின்படி, ஈரோடு மாநகராட்சி மண்டலம் 4-க்குட்பட்ட வார்டு எண்.43 மரப்பாலம் பகுதியில் அமைந்துள்ள அம்மா உணவகம் கட்டி முடிக்கப்பட்டு 13 ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையில், பின்வரும் பழுதுகள் கண்டறியப்பட்டு, உடனடியாகச் சீரமைக்க வேண்டியுள்ளது, எனவே இக்கட்டிடத்தின் கட்டிடத்தின் பல இடங்களில் சுவர்களில் அமைக்கப்பட்டுள்ள டைல்ஸ் சேதம் அடைந்து உடைந்துள்ளது மற்றும் தரை மற்றும் கழிவறைகளில்

பதிக்கப்பட்ட டைல்ஸ்கள், அங்கான்கள் சிதலமடைந்துள்ளன. அம்மா உணவகம் முன்புறம் உள்ள சுற்றுச்சுவர் உயரம் குறைவாக உள்ள காரணத்தால் இரவு நேரங்களில் சமூக விரோதிகள் உட்புறம் தாண்டி வந்து விரும்பதகாத செயல்களில் ஈடுபடுகின்றனர். மேலும், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் இயந்திரம் (RO Plant) பழுதடைந்துள்ளது. உணவு சமைப்பதற்கும் பரிமாறுவதற்கும் தேவையான பக்கெட், பிளாஸ்டிக் ஸ்டூல் மற்றும் இதர தளவாடப்பொருட்களும் பழுதடைந்துள்ளன. எனவே, மேற்படி அம்மா உணவகக் கட்டிடத்தைப் பழுதுபார்த்து, சீரமைத்து, வர்ணம் பூசவும், புதியதாக தண்ணீர் தொட்டி அமைக்கவும் மற்றும் சமையலறைக்குத் தேவையான தளவாடப் பொருட்களை வாங்கவும் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.6.70 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்.இ1/ 678 /2026 (மையம்)

363.) அனுமதிக்கப்பட்டது

மேயர். 26/5/2026

இடம்- ஈரோடு **ஈரோடு மாநகராட்சி.**

நாள். 26.05.2026

26/5/26